இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 149 | இதழ் : 07 | திகதி : 18.05.2025 | விலை : 50.00

# புதிய திருத்தந்தையாக பதின்நான்காம் லியோ நியமனம்



திருத்தந்தை 14ஆம் லியோ அவர்களின் பணிசிறக்க வாழ்த்துகின்றோம்

புதுயுகம் படைத்திட
புனித வாசல் வழியாக
புதிய திருத்தந்தையாக
இளைய திருத்தந்தையென
இவ்வுலகம் இனிதுவக்க
இளமைத் துடிப்புடன்
இறைவார்த்தை கலந்து நீர்
இயம்பிய அற்புத மொழிகேட்டு
இந்தியா - பாகிஸ்தான்
ரஸ்யா - உக்ரைன்
சமாதானக்கனி உண்ண
சிறகசைத்துப் பறந்தனவே
நல்லதொரு முகூர்த்தம் தந்தையே!
உலகம் இன்று
விஷப் பரீட்சைகளிலும்
பலப் பரீட்சைகளிலும்
சிக்குண்டு சிதறுகிறது
வத்திக்கான் உப்பரிகையில்
வெண்ணிறப் புகை நடுவே உம்
வெண்மேனி எழுந்த காலை
உலகம் உம்மை அண்ணாந்து
பார்த்ததுவே
உதய சூரியன் உதித்து விட்டான்
இருள் விலகும் என
காத்திருக்கின்றோம்
"இந்தப் பாறையின் மேல்
என் திருச்சபையைக் கட்டுவேன்
பாதாளத்தின் வாயில்கள்
அதன் மேல் வெற்றிகொள்ளா"
என கிறிஸ்து இயேசு
உம் வருகை கண்டு
மீண்டும் ஒரு தடவை
திருவாய் மலர்கிறார்
திருத்தந்தையாக உம் பணி தொடர
வணங்கி வரவேற்கின்றோம்!

கவியாக்கம் : இ.இ.வசீகரன்


## திருஅவையின் 267 – ஆவது திருத்தந்தை பதினான்காம் லியோ

திருஅவையை வழிநடத்தவென 267-ஆவது திருத்தந்தையாக புனித அகுஸ்தீனார் சபையைச் சார்ந்த அமெரிக்க நாட்டவரான கர்தினால் றொபேட் பிரான்சிஸ் பிறிவோஸ்ட் O.S.A. அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவரைத் திருஅலையின் திருத்தந்தையாக கர்தினால் தோமினிக் மம்பர்த்தி அவர்கள் இம்மாதம் 8ம் திகதி வியாழன் மாலை வத்திக்கான் வளாகத்தின் மேல் மாடத்தில் இருந்து அறிவித்தார். வத்திக்கான் தூய பேதுரு பெருங்கோவிலில் வளாகத்தில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் முன்பாக, மேல் மாடத்தில் தோன்றிய கர்தினால் தோமினிக் மம்பர்த்தி அவர்கள், "நான் உங்களுக்கு ஒரு பெரிய மகிழ்வான செய்தியை அறிவிக்கிறேன்: நாம் ஒரு திருத்தந்தையைப் பெற்றுவிட்டோம்" என்று கூறினார்.

புதிய திருத்தந்தை அவர்கள் பதினான்காம் லியோ என்ற பெயரைத் தனக்குத் தேர்ந்தெடுத்துள்ளார். 1955 - ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று அமெரிக்காவின் சிகாகோவில் பிறந்த புதிய திருத்தந்தை 14ஆம் லியோ. அகுஸ்தினார் துறவு சபையில் இணைந்து பணிக்குருவாகி 2001 முதல் 2013 வரை அத்துறவு சபையின் அதிபராக பணியாற்றியுள்ளார். 2014-ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவரை கல்லோ மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க நிர்வாகியாகவும், 2023 ஜனவரி 30 அன்று ஆயர்களுக்கான திருப்பீடத்துறையின் புதிய தலைவராகவும், இலத்தீன் அமெரிக்காவிற்கான திருப்பீட ஆணையத்தின் தலைவராகவும் நியமித்தார். 2023ம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் திகதி இவர் கர்தினாலாக உயர்த்தப்பட்டார். புதிய திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 14ம் லியோ அவர்கள் அகுஸ்தீனார் சபையைச் சார்ந்த முதலாவது திருத்தந்தையாகவும், அதேவேளை முதலாவது அமெரிக்கராகவும் விளங்குகின்றார். புதிய திருத்தந்தை தனது முதலாவது திருப்பலியை வத்திக்கான் சிஸ்டைன் பேராலயத்தில் கடந்த 9ம் திகதி ஒப்புக்கொடுத்தார்

## பிறந்த தின நல்வாழ்த்துக்கள்

மரியன்னை வழி இயேசுவிடம் என்ற
விசுவாச தத்துவமும்
நிமிர்ந்த நன்னடையும்
நின்றுயர் தோற்றமும்
நேர்கொண்ட தீர்க்கதரிசனப்
பார்வையும்
யாருக்கும் எதற்கும் அஞ்சாத
மிடுக்குடை தற்துணிவும்
ஆன்மீக இறை பணியின்
ஆணிவேரென ஊடுருவலும்
கல்விப் பணி அரசியல்
சமூகப் பணியென
ஆளுமையின் பரந்த வீச்சும்
ஆயத்துவ அணிகலன்களாக
நீர் அணியப் பெற்றதால்
நல்லாயன் நானே என்ற இயேசுவின்
வார்த்தைக்கு வாழ்வு கொடுக்கின்றீர்
வளம் பெற்றது எமது யாழ் திருஅவை
அகவை நாளில்
இறையருள் வேண்டி
பல்லாண்டு கூறி வாழ்த்துகின்றோம்!



ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## வணக்க மாதம் வணக்கத்திற்குரியது

கிறிஸ்து இயேசு மற்றும் இயேசுவின் சீடர்கள் அவரது அன்னைக்கு காட்டிய அன்பும், பாசமும் தொடக்கத் திரு அவை அவருக்குக் கொடுத்திருந்த உயர்ந்த இடமும் மரியன்னை வணக்கத்தின் அடிப்படையாகிறது. திருஅவைத் தந்தையர்கள் மறை வல்லுனர்கள் மரியன்னை பற்றி வகுத்தளித்த சிந்தனைகள் மரியியலின் ஆரம்ப வித்துக்கள் ஆகின.

கத்தோலிக்க திருஅவையில் மரியன்னைக்கு முதன்மையான இடம் உண்டு. மரியன்னை வணக்கம், திரு அவையின் எல்லாப் பகுதிகளிலும் பரவலாகக் கடைப்பிடிக்கப்படும் முதன்மையான ஒரு பக்தி முயற்சியாக விளங்குவதுடன், ஆழமாக வேரூன்றியுள்ள பக்தியாகவும் விளங்குகின்றது.

திருஅவையின் பிள்ளைகள் அனைவரும் இத் தூய கன்னியின் வணக்கத்தைச் சிறப்பாக பொது வழிபாட்டு வணக்கத்தைப் பெரு மனதுடன் போற்றி வருவதைக் காண முடிகின்றது. மரியன்னை வணக்கத்தையும் பக்தி முயற்சிகளையும் தொடர்ந்து கடைப்பிடிக்க திருச்சங்கம் அறிவுறுத்தும் பொழுது உண்மையான விசுவாசத்துடன் இறை அன்னையின் மேன்மையை ஏற்றுக்கொண்டு நாம் நம் தாயிடம் ஆழமான அன்பு கொண்டு அவருடைய நற்பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கேட்டுள்ளது.

கத்தோலிக்க திருஅவை மே மாதத்தை அன்னை மரியாவின் வணக்க மாதமாகச் சிறப்பித்து மகிழ்கிறது. இறைவனின் தாயைக் கொண்டாடும் இம்மாதத்தில் நாமும் அண்மையில் யாழ் திரு அவை உள்ள முக் கியமான திருத்தலங்களில் ஒன்றான புனித பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னையின் திருத்தலத்தில் எமது மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் ஆண்டகை அவர்களால் "செபமாலைப் பூங்கா" திறந்து வைக்கப்பட்டு அன்னையின் பக்தியை மென்மேலும் வளர்ப்பதற்கு வழிவகை செய்துள்ளோம்.

இச்செபமாலைப் பூங்காவில் நாம் நான்கு மறையுண்மைகளையும் இருபது நிலைகளில் தியானிக்கும் போது இயேசுவுடனும் மரியன்னையுடனும் இணைந்து திரு விவிலியத்தின் புதிய ஏற்பாடு முழுவதையும் நோக்கியவர்களாகப் பயணிக்க முடிகின்றது. எமது அன்னைக்குரிய இச் செபமாலைப் பூங்கா வழியாக எங்கள் மனங்கள், குடும்பங்கள், சமூகம் அமைதிப் பூங்காவாக மாறி நிற்க இவ் வணக்கமாதத்தில் மிகுந்த பக்தியுடன் அன்னையிடம் வரம்கேட்போம்.

அன்னை மரியா இறைவனின் தாயாக திருஅவையால் போதிக்கப்பட்டும் ஏற்கப்பட்டும் வருகின்றார். புனித லூக்கா தனது நற்செய்தியில் மரியாவை "ஆண்டவரின் தாய்" (லூக்.1:43) என அறிமுகம் செய்கின்றார். மேலும் "பெண்களுக்குள் ஆசி பெற்றவர் " (லூக்.1:42, 11:27) எனவும் நற்செய்தி அன்னை மரியாளின் மகிமையைப் பறைசாற்றுகின்றது.

தாழ்ச்சி, பொறுமை, நம்பிக்கை, இடைவிடாது செபித்தல், குடும்பப் பொறுப்பு, துன்பத்தை ஏற்றல் ஆகிய இறை விசுவாச நற்கனிகளை அன்னை கொண்டிருந்தது போல அன்னையின் பிள்ளைகளாகிய நாங்களும் கொண்டிருக்க வேண்டும். அதனை விடுத்து உலகியலுக்கும் உலக செல்வங்களுக்கும் அடிமைகளாகி மனப்பாடம் சொல்லும் மந்திரமாக மாத்திரம் அன்னை மரியாளின் பக்திச் செபங்களையும் காரணிக்கங்களையும், ஐம்பத்து மூன்று மணிகளில் உச்சரிப்போமாக இருந்தால் நமது பக்தி வீணானதாகவே மாறிவிடும். வணக்கமாதமும் தனது அர்த்தத்தை இழந்து பொருளில்லாமல் கழியும் நாட்களைப் போன்று நம் மத்தியில் கழிந்து செல்லும்.

"இதோ உமது அடிமை" என்று கீழ்ப்படிந்து இறை திட்டத்தை ஏற்ற அன்னை மரியா இறைவனுக்கே தன்னை முற்றுமுழுதாக அடிமையாக்கி, தூய நிலைக்கு உயர்ந்தார். அன்னையின் வழியைப் பின்பற்றும் நாமும் இறைவனுக்கே எம்மை முழுமையாக அர்ப்பணித்து இறையன்பையும், இறை பராமரிப்பையும் எமது அயலவர்களோடும் பல்வேறு துன்பத்துக்குள்ளாகியிருக்கும் சகோதரர்களோடும் பகிர்ந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

முதலும் முடிவும் அகரமும் னகரமும் ஆதியும் அந்தமுமான இயேசுவை அகிலத்திற்கு அளித்த நம் தேவதாயின் பாதமலரைப் பின்பற்றி வாடாத மலராக நாம் வாழ்ந்திட அன்னையின் அருள்வேண்டி இடைவிடாது செபிப்போம். செபமாலை சொல்வோம், கூடிச் செபிப்போம். எமது குடும்பங்களிலும் எமது திருஅவையிலும் நம்பிக்கையின் ஒளிவீசி அமைதிப் பூங்காக்களாக நாம் மாற அன்னையின் அருள் வேண்டி செபிப்போம். மாதாவே துணை நீரே! உம்மை வாழ்த்திப் போற்ற வரம் தாரும்!


**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**

# பணித்தள இடமாற்றங்கள்

யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையினால் யாழ். மறை மாவட்டத்தில் பணிபுரியும் சில அருட்பணியாளர்களுக்கு பணித்தள இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்பணித்தள இடமாற்றங்கள் மே மாதம் முதல் நடைமுறைக்கு வருமென ஆயர் அவர்கள் அறியத்தந்துள்ளார். பணிமாற்றங்களும் புதிய நியமனங்களும் பெறும் அருட்பணியாளர்களின் விபரங்கள் வருமாறு:

| | |
|---|---|
| அருட்பணி J.A.யேசுதாஸ் | - மறைக்கோட்ட முதல்வர் - இளவாலை |
| அருட்பணி. C.G ஜெயக்குமார் | - மறைக்கோட்ட முதல்வர் - கிளிநொச்சி பங்குத்தந்தை - கிளிநொச்சி |
| அருட்பணி. S. இயூஜின் பிரான்சிஸ் | - பங்குத்தந்தை - நாவாந்துறை |
| அருட்பணி. A.அன்ரோ டெனிசியஸ் | - பணிப்பாளர் கரித்தாஸ் கியூடெக் - யாழ்ப்பாணம் |
| அருட்பணி. L.A.றொக் பஸ்ரியன் | - உதவிப் பங்குத்தந்தை - முல்லைத்தீவு |
| அருட்பணி. P.டினுஷன் | - உதவிப் பங்குத்தந்தை - நாவாந்துறை |
| அருட்பணி. A.றொகான் டியோனி | - உதவிப் பங்குத்தந்தை - மரியன்னை பேராலயம் |
| அருட்பணி. C.G றொகான் | - உதவிப் பங்குத்தந்தை - குருநகர் |
| அருட்பணி. J.அன்ரன் கஜிஸ்காந்த் | - விடுதிக்காப்பாளர் - புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் |
| அருட்பணி.S. அஜித் சுலக்ஷன் | - பங்குத்தந்தை - இரணைப்பாலை |
| அருட்பணி. T.ராஜ் டிலக்ஷன் | - பங்குத்தந்தை - வட்டக்கச்சி |
| அருட்பணி.K.தயாதீபன் | - பங்குத்தந்தை - செபமாலை அன்னை ஆலயம் இரணைமாதா நகர் |
| அருட்பணி. A.V.சில்வெஸ்ரர்தாஸ் | - பங்குத்தந்தை - புனித யாகப்பர் ஆலயம் இளவாலை |
| அருட்பணி. J.பிரான்சிஸ் | - பங்குத்தந்தை - குளமங்கால் |
| அருட்பணி.M.யேசுரட்ணம் | - பங்குத்தந்தை - ஆனைக்கோட்டை |
| அருட்பணி. A.ஞானப்பிரகாசம் | - பங்குத்தந்தை - பரந்தன் |
| அருட்பணி. C.J. அன்ரனிபாலா | - பங்குத்தந்தை - மரியன்னை ஆலயம் - முழங்காவில் |

# அன்னை மரியா - அகுஸ்தீனாரை பிரதிபலிக்கும் இலச்சினை




புனித அகுஸ்தீனார், 'நாம் கிறிஸ்தவர்களாக பெருமெண்ணிக்கையில் இருந்தாலும் ஒரே கிறிஸ்துவில் நாம் அனைவரும் ஒன்றே' எனக்கூறிய வார்த்தைகளைப் பிரதிபலிப்பதாகத் திருத்தந்தையின் விருதுவாக்கு உள்ளது.

புதிய திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள் எடுத்துள்ள இலச்சினை அன்னை மரியா மீது அவர் கொண்டுள்ள பக்தியையும் புனித அகுஸ்தீனாரிடமிருந்து அவர் பெற்றுள்ள தூண்டுதல்களையும் வெளிப்படுத்துவதாக உள்ளது என திருப்பீடத் தகவல் தொடர்புத்துறை அறிவித்துள்ளது.

வழக்கமாக திருத்தந்தையர்களின் 'Coat of Arms' எனப்படும் இலச்சினை அனைத்திலும் காணப்படுவதுபோல் திருத்தந்தையர் அணியும் ஆயருக்குரிய மகுடம் போன்ற தொப்பியும், இரு திறவுகோல்கள் ஒன்றுக்கொன்று குறுக்காக வைக்கப்பட்டிருப்பதுடன், மேல்பகுதியின் இடதுபுறத்தில் இளநீல பின்னணியுடன் லீலி மலர் அடையாளம் வெள்ளி நிறத்திலும், கீழே வலது புறத்தில் இளமஞ்சள் நிறத்தின் பின்னணியில் ஒரு சிகப்பு நிற புத்தகத்தின் மீது ஓர் அம்பால் துளைக்கப்பட்ட சிவப்பு இதயம் அதன் மேல் முனையில் சுடரைத் தாங்கியதாக உள்ளது.

அந்த இலச்சினையின் அடிப் பகுதியில் திருத்தந்தை 14ஆம் லியோவின் "ஒருவராக இருப்பவரில் நாமனைவரும் ஒன்றாய்" என்ற விருது வாக்கு எழுதப்பட்டுள்ளது.

புனித அகுஸ்தீனார் 127ஆம் திருப்பாடல் குறித்த தன் மறையுரையில்,'நாம் கிறிஸ்தவர்களாகப் பெருமெண்ணிக்கையில் இருந்தாலும் ஒரே கிறிஸ்துவில் நாம் அனைவரும் ஒன்றே' எனக்கூறிய வார்த்தைகளைப் பிரதிபலிப்பதாகத் திருத்தந்தையின் விருது வாக்கு உள்ளது.

இளநீல வண்ணமும் லில்லி மலரும் அன்னை மரியை அடையாளப்படுத்தி நிற்கின்றன எனவும், அம்பு துளைத்த இதயம் அகுஸ்தினார் சபையின் அடையாளமாக இருப்பதாகவும் திருப்பீட தகவல் தொடர்புத்துறை அறிவித்துள்ளது.

# கிறிஸ்தவ பாடசாலைச் சகோதரர்களுடன் திருத்தந்தை 14-ஆம் லியோ

கல்வியின் வழியாக மாணவர்களின் இதயங்களைத் தொட்டு, சிறந்ததைக் கொடுக்கவும், துணிவுடன் ஒவ்வொரு தடையையும் எதிர் கொள்ள அவர்களுக்கு உதவியையும் ஊக்கத்தையும் வழங்க நம்மால் முடியும்.

கல்வி கற்பித்தலின் வாயிலாக நற்செய்தி அறிவித்தல், நற்செய்தி அறிவித்தலின் வாயிலாக கல்வி கற்பித்தல் அவசியம் என்றும், புனித ஜொவான்னி பத்திஸ்தா தெலசாலைப்போல கற்றலில் புதிய வழிகளைக் கண்டறிதல், கற்றலுக்கான கருவிகளை அதிகமாக்குதல், புதிய மொழிகளை ஏற்றுக்கொள்ளுதல் போன்றவற்றிற்கான படிக்கட்டுகளை நம்மால் உருவாக்க முடியும் என்று வலியுறுத்தினார் திருத்தந்தை 14-ஆம் லியோ.


கடந்த 15ம் திகதி வத்திக்கான் கிளமெந்தினா அறையில் கத்தோலிக்க பள்ளி நிறுவனங்களின் சகோதரர்களைச் சந்தித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை 14 -ஆம் லியோ அவர்கள், தற்போதைய நிகழ்வுகள் மீதான கவனம் மற்றும் சமூகத்தில் கற்பித்தலின் நிர்வாக மற்றும் மறைப்பணி பரிமாணம் என்னும் இரண்டு தலைப்புக்களின் கீழ் தனது கருத்துக்களை எடுத்துரைத்தார்.

திருத்தந்தை 13-ஆம் பெனடிக்ற் அவர்கள் கத்தோலிக்க பாடசாலை நிறுவனங்களுக்கான விதிகளை அங்கீகரித்த திருஅவை பிரகடனத்தின் மூன்றாம் நூற்றாண்டு (ஜனவரி 26, 1725) மற்றும், திருத்தந்தை 12-ஆம் பயஸ் புனித ஜான் த பாப்டிஸ் தெசால் அவர்களை அனைத்து கல்வியாளர்களின் பாதுகாவலராக நியமித்த 75ஆவது ஆண்டு (மே 15, 1950) ஆகியவற்றை முன்னிட்டு கத்தோலிக்க பள்ளி நிறுவனங்களின் சகோதரர்களைச் சந்தித்தார் திருத்தந்தை 14ஆம் லியோ.

உங்களது பணிகள் தற்கால நிகழ்வுகள் பற்றி அதிகமாக எடுத்துரைக்கின்றன என்று கூறிய திருத்தந்தை அவர்கள், புனித திசால் அவர்கள் அட்ரியன் நைல் என்ற பொது நிலையினர் ஏழைகளுக்கான பள்ளியினை பராமரிக்க வேண்டி எடுத்துரைத்த கோரிக்கையை ஏற்று உதவினார் என்றும், அம்மனிதரின் கோரிக்கையில் கடவுளின் அடையாளத்தை உணர்ந்தார், சவால்களை ஏற்றுக்கொண்டு பணியாற்றத் தொடங்கினார் என்றும் மொழிந்தார்.

இக்கால இளைஞர்கள், வாழ்க்கை, ஆற்றல், உணர்வுகள் மற்றும் அறிவாற்றலின் எரிமலைகளாக இருக்கின்றனர் என்பதைப் பல துறைகளில் அவர்கள் ஆற்றக்கூடிய அற்புதமான விடயங்களால் காணலாம் என்றும், இருப்பினும், நல்லிணக்கத்தை வளர்த்தல், கடந்த காலத்தை விட வித்தியாசமான முறையில், அவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் விடயங்களைக் கடத்தல் போன்றவற்றிற்கு அவர்களுக்கு இன்னும் அதிகமாக நமது உதவி தேவை என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை.

# பெரு நாட்டின் ஏழைகளோடு நடந்த பாதங்கள்



# புதிய திருத்தந்தையாக திருத்தந்தை 14 ஆம் லியோ

இறை அருளினாலும் பரிசுத்த ஆவியின் தூண்டுதலினாலும் அகில உலகத் திருஅவையில் இருக்கின்ற விசுவாசிகளின் இடைவிடா செபத்தின் பலனாகவும் 69 வயதுடைய கருதினால் றொபேட் பிரான்சிஸ் பிறிவெஸ் கத்தோலிக்க திருஅவையின் 267 வது திருத்தந்தையாக 14ஆவது லியோ என்கின்ற பெயரோடு உலகத்துக்கு அறிமுகமானார். இந்த வருடம் மே மாதம் 8ம் திகதி புதிய திருத்தந்தையாக தெரிவு செய்யப்பட்ட இவர் சரித்திர பூர்வமாகப் பல சிறப்பியல்புகளைக் கொண்டவர். இவர் அமெரிக்க நாட்டில் இருந்து தெரிவு செய்யப்பட்ட முதலாவது திருத்தந்தை, புனித அகுஸ்தினார் என்கின்ற துறவற சபையிலிருந்து உருவாகிய முதலாவது திருத்தந்தை, அமெரிக்கா, பெரு என்ற இரண்டு நாட்டிற்குமான இரட்டைக் குடியுரிமை பெற்ற முதல் திருத்தந்தை.

**இறை பணியில் தன்னைக் கரைத்த அவரது வாழ்க்கைப் பயணம்**

அமெரிக்காவின் சிக்காக்கோவில் உள்ள இல்லினோய்ஸ் என்ற இடத்தில் செப்ரம்பர் மாதம் 14ம் திகதி 1955ம் ஆண்டு பிறந்தார். இவரது தந்தை Louis Marius Prevost பிரெஞ்சு மற்றும் இத்தாலிய மொழி பேசும் வம்சாவளியைச் சார்ந்தவர். தாயார் Mildred Martinez இஸ்பானிய மொழி பேசும் வம்சாவளியைச் சார்ந்தவர். இவருக்கு Louis Martin மற்றும் John Joseph என்னும் இரண்டு சகோதரர்கள் உள்ளனர். இவ்வாறு பிரான்சிய, இத்தாலிய ஸ்பானிய பாரம்பரியத்தை க் கொண்ட ஒரு பன்முக கலாசார குடும்பத்தில் இவர் பிறந்து வாழ்ந்தார்.

இறைபணிக்கு அழைக்கப்பட்டதை உணர்ந்த இவர் புனித அகுஸ்தின் சபையில் சேர்ந்து இளங்குருமடத்தில் தன் குருத்துவ உருவாக்கத்தைப் பெற்றார். பின்னர் 1977 ஆம் ஆண்டில் பென்சில்வேனியாவில் உள்ள வில்லானோவா பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று கணிதத்திலும் தத்துவ இயலிலும் பட்டம் பெற்றார். பின்னர் குருத்துவ உருவாக்கத்தை தொடர்ந்து 1982 ஆண்டு யூன் மாதம் 19 ம் திகதி குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். இவர் பெரு நாட்டில் பெரு நாட்டில் இரு சகாப்தங்களுக்கு மேலாக ஏழைகள், வறியவர்கள் ஒரங்கட்டப்பட்ட மக்களுக்காகத் தன்னுடைய பணியை மேற்கொண்டார். இவருடைய ஆழமான மறைபணி, சமூகப்பணி காரணமாக 2015ம் ஆண்டு இவர் பெருநாட்டில் உள்ள சிக்கலோ மறைமாவட்டத்திற்கு ஆயராக நியமிக்கப்பட்டார். பின்பு இவருடைய தலைமைத்துவ ஆளுமையை அங்கீகரித்து 2023ஆம் ஆண்டு திருந்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவரைத் திருப்பீட ஆயர் பேரவைக்கான தலைவராகவும், இலத்தீன் அமெரிக்காவுக்கான திருப்பீட ஆணையகத்தின் தலைவராகவும் நிய மித்தார். 2023ம் ஆண்டு செப்ரெம்பர் 30ம் திகதி நடைபெற்ற கருதினால்கள் அவையில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவரைக் கருதினாலாக அறிவித்தார்.

**திருத்தந்தையின் தெரிவு**

சிஸ்டின் கோபுரத்தில் வெள்ளைப் புகை எழுந்ததும் லியோ என்ற பெயர் ஒலித்ததும் உலகம் திகைத்துப் பார்த்தது. சிறப்பாக இத்தேர்வு திருத்தந்தை பிரான்சிஸ் கொண்டிருந்த தன்னை மையப்படுத்தாத வெளியுலகைப் பார்க்கின்ற மற்றும் இரக்கமுள்ள ஒரு திருஅவையே எங்களுக்குத் தேவை என்பதை இவரின் தெரிவு ஊடாக அகில உலகிற்குக் கருதினால்கள் வெளிப்படுத்தியுள்ளனர். பேதுரு சதுக்கத்தில் கூடியிருந்த மக்களுக்கான தனது கன்னி உரையில் "உங்கள் அனைவருக்கும் அமைதி உண்டாகட்டும்" என்று அன்போடும் பாசத்தோடும் வாழ்த்தினார். மேலும் தன் உரையில் திருஅவையின் ஒருமைப்பாடு, உரையாடலின் முக்கியத்துவம் மற்றும் ஒதுக்கப்பட்டவர்களுக்கான சேவை என்கின்ற கருப்பொருட்களைத் திருஅவையின மிக முக்கியமான விழுமியங்களாக அவர் வலியுறுத்தினார்.

**அவர் தெரிந்து எடுத்த பெயர் சொல்லும் செய்தி**

அவர் தன்னுடைய பெயரை 14ஆம் லியோ என்று குறிப்பிடுவதன் மூலம் அவருடைய திருத்தந்தைப் பணியில் அவர் முன்னெடுக்கவுள்ள முன்னுரிமைப் பணிகள் பற்றிய ஒரு தரிசனப் பார்வையை நமக்குத் தருகின்றது. திருச்சபையினுடைய சமூகக் கோட்பாடுகளில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய வர் திருத்தந்தை 13ம் லியோ. அன்றைய காலகட்டத்தில் தொழிலாளர்களுக்கு சரியான முறையில் ஊதியம் கொடுக்காமல் நீண்ட நேரம் அவர்கள் வேலை செய்ய வேண்டும் என்று முதலாளித்துவ சமுகம் தொழிலாளர் சமூகத்தை அடக்கி ஒடுக்கிய பொழுது "றோரும் நோவரும்" என்கின்ற புரட்சி கரணமான திருமடலை எழுதியவர் திருத்தந்தை 13ம் லியோ. இந்தத் திருமடல் திருஅவையை மாத்திரமல்ல அகில உலகையே அதிரவைத்த ஒரு திருமடலாகும். திருஅவையானது திருஅவைக்குள் இருக்கின்ற உள்ளகப் பிரச்சினைகளை மாத்திரம் பார்க்கின்ற ஒரு

அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

சிந்தனைப்போக்கை மாற்றி மக்களைப் பாதிக்கின்ற அனைத்துப் பிரச்சினைகளிலும் தலையிட வேண்டும் என்கின்ற உயரிய சிந்தனைப் போக்கை திருஅவைக்குள் உட்புகுத்தியவர் திருத்தந்தை 13ம் லியோ. எனவே 14 ஆம் லியோ என்கின்ற பெயரை நம் புதிய திருத்தந்தை எடுப்பதன் மூலமாக ஏழைகள், எளியவர்கள் அநீதி இழைக்கப்படுகின்றவர்கள் சார்பாக திருச்சபை எடுத்திருக்கின்ற பாரம்பரியத்தில் புதிய திருத்தந்தை தன்னையும் இணைத்துக் கொள்கின்றார் என்ற மகிழ்ச்சியின் செய்தி உலகிற்கு வெளிப்படுத்தப்படுகின்றது.

இன்றைய உலகம் பல்வேறு வித மான சமூக அரசியல் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் சவால்களை சந்திக்கின்றது. உலகளாவிய சமத்துவமின்மை, சுற்றுச் சூழல் சீரழிவு கட்டாய இடப் பெயர்வு மற்றும் பூகோள மயமாக்கலால் ஏற்படுத்தியுள்ள விரைவான தொழில்நுட்பப் புரட்சி ஏழை மக்களுக்கு பெரும் சவால்களை ஏற்படுத்தி வரும் இக்கால கட்டத்தில் திருச்சபை தொடர்ந்தும் குரல் அற்றவர்களுக்கான ஒரு குரலாகவும் மனித மாண்பின் பாதுகாவலராக இருக்கும் என்பதனைத் திருத்தந்தை தனக்காக தெரிந்து எடுத்துள்ள பெயர் கட்டியம் கூறிநிற்கின்றது. தொழில்மயமாக்கப்பட்ட உலகத்தைப் பார்த்து நற்செய்தியில் வேரூன்றிய ஒரு நீதியான உலக ஒழுங்கிற்கு 13ம் லியோ அழைப்பு விடுத்ததைப் போல உலக மயமாக்கப்பட்ட இன்றைய நவீன உலகத்தில் அதே நற்செய்தி உண்மைகளை புதிய வீரியத்துடன் அறிவித்து அனைத்து மக்களும் முழுமனிதர்களாய் மகிழ்வுடனும் நிறைவுடனும் வாழ திருஅவை களம் அமைக்க வேண்டும் என்பது புதிய திருத்தந்தையின் தரிசனப் பார்வையாகும். இன்றைய உலகம் சந்திக்கின்ற பிரச்சினைகளான உழைப்பு சுரண்டல், சுற்றுச் சூழல் சரிகை எனும் குடும்பம் மற்றும் சமூக வாழ்வில் ஏற்பட்டுள்ள முறிவுகள் என்பன வெறும் தொழில்நுட்ப அரசியல் பிரச்சினைகள் மட்டுமல்ல மாறாக அடிப்படையில் இவை அறநெறி ஆன்மீகப் பிரச்சினையாகும்.

**அகஸ்தீனியன் சபையின் முதல் திருத்தந்தை**

நமது திருத்தந்தை புனித அகுஸ்தினாருடைய ஆன்மீகப் பாரம்பரியத்தில் ஊறிய ஒருவராக இருக்கின்றார். சிறப்பாக இந்த புனித அகுஸ்தீனார் சபையின் ஆன்மீகம் சமூகத்தன்மை, தாழ்ச்சி உண்மைக்கான தேடல் என்கின்ற உன்னதமான விழுமியங்களை அடித்தளமாகக் கொண்டது ஒரு துறவற சபையாகும். இந்த விழுமியங்கள் நம் திருத்தந்தையினுடைய குருத்துவம் துறவறம் மேய்ப்புப்பணி மற்றும் மறை பரப்பு பணி வாழ்வில் பிண்ணிப்பிணைந்த விழுமியங்களாகும் அவர் ஆயராகத் திரு நிலைப்படுத்தப்பட்ட பொழுது அவர் தனக்கென்று எடுத்துக் கொண்ட ஆயர் விருது வாக்கு "ஒரே கிறிஸ்துவில் நாம் அனைவரும் ஒன்று" ( In the One Christ, we are one). புனித அகுஸ்தீனார் ஒருமுறை தன்னுடை மறையுரையில் இவ்வாறு குறிப்பிட்டார் In Illo uno unum. அதாவது கடவுளில் ஒன்றாய். அதாவது ஒரே கிறிஸ்துவில் நாம் எல்லோரும் ஒன்றாய் இருக்கின்றோம். திருச்சபையில் மனுக்குலம் முழுவதும் உண்மையான ஒற்றுமையை கிறிஸ்துவில் மட்டும் காணமுடியும் என்பது நமது திருத்தந்தையின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். அதாவது இறைவா எங்களை உமக்காகப் படைத்தீர் எனவே எங்கள் இதயங்கள் உம்மிலன்றி அமைதியடைய என்கின்ற புனித அகுஸ்தினாருடையது. வாழ்வின் வார்த்தைகள் திருத்தந்தையின் வாழ்வில் மட்டுமல்ல அவரது சிந்தனைகளில் பிரதிபலிக்கின்றன.

**திருத்தந்தையின் ஏழைகளுக்கான விருப்பத் தெரிவு**

பெருவில் அவர் ஆற்றிய இரண்டு சகாப்த கால மிசனரி வாழ்வு குறிப்பாக சிக்லாயோ மறைமாவட்ட ஆயராக இருந்த காலத்தில் அவர் பழங்குடி மக்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்களின் மாண்பைப் பாதுகாத்தார். அவர் ஏழைகளுக்குத் தன் வார்த்தையிலும் செயலிலும் முன்னுரிமை அளிக்கும் விருப்பத்தை வெளிப்படுத்தினார். சிறப்பாக தான் பணி செய்த இடங்களில் 2ம் வத்திக்கான் சங்கச் சிந்தனைகளைக் கொண்ட மேய்ப்புப் பணி உத்தி யைப் பயன்படுத்தினார். அதாவது கிறிஸ்துவில் விசுவாசத்தையும் உள்ளூர் கலாசாரங்களையும் இணைத்து உண்மையான உயரிய கலாச்சாரத்தை வளர்த்தார்.

திருஅவை என்பது பயணம் செய்யும் மக்கள் என்கின்ற புனித அகுஸ்தினாருடைய பார்வையில் இருந்து உத்வேகம் பெற்ற நம் திருத்தந்தை தோழமை மற்றும் பரஸ்பர அக்கறையில் வேரூன்றிய துடிப்பான திருச்சபைச் சமூகங்களை வளர்த்தார. அவரது மறைபரப்பு ஆர்வம் என்பது நற்செய்தி அறிவிப்புப் பணியுடன் நின்றுவிடாமல் கல்வி சுகாதாரம் மற்றும் சமூகநீதி ஆகியவற்றுக்காக உழைக்கின்ற முன் முயற்சிகளுக்கும் நீடிக்கப்பட்டது. இது கத்தோலிக்க திருஅவையின் பணியின் முழுமையான தன்மையைப் பிரதிபலிக்கின்றது.

எனவே நம் திருத்தத்தை தன்னுடைய திருப்பணிக்காலத்தில் அகஸ்தினிய துறவறசபையினால் வளப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் உடலின் மீதான ஆன்மீக அன்பால் குறிப்பாக துன்பப்படுகின்ற ஒடுக்கப்படுதின்ற மக்களுக்கான ஒரு பணியாக உயிருட்டம் பெறுகின்றது. ஆகவே அவருடைய திருத்தந்தை பணி என்பது திருச்சபையின் விசுவாசத்தைப் பாதுகாப்பது மட்டுமல்லாமல் இன்றைய நவீன உலகம் எதிர்பார்த்திருக்கும் உலகத்தின் கடை எல்லைவரை தைரியமாகச் சென்று எல்லா இனத்தாரையும் சீராக்குகின்ற ஒரு மகத்தான பணிக்குத் திருத்தந்தை தன்னை அர்ப்பணித்துள்ளார்.

**புதிய திருத்தந்தையும் கூட்டொருங்கியக்கமும்**

புதிய திருத்தந்தையினுடைய பணி வாழ்வையும் அவர் திருத்தந்தையாக வந்தவுடன் ஆற்றிய முதலாவது உரையையும் பார்க்கின்ற பொழுது நம் முன்னால் பிரான்சிஸ் அவர்கள் திரு அவை ஒரு கூட்டொருங்கியக்கம் அதாவது ஒன்றாகப் பயணம் செய்கின்ற ஒரு அவை என்கின்ற கனவை புதிய திருத்தந்தை முழு மூச்சுடன் முன்னெடுப்பார் என்பதைக் கட்டியம் கூறுகின்றது.

குறிப்பாக திரு அவை என்பது ஒரு நிர்வாக அமைப்பு மாத்திரமல்ல அது கடவளின் மக்கள் ஆகும். அதாவது நம்பிக்கை மற்றும் தொண்டால் ஒன்று பட்ட யாத்திரிகையாளர்கள். இந்தக் கருத்தைப் புதிய திருத்தந்தை இன்னும் ஆழமாக முன்னெடுப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டு வத்திக்கான் செய்திக்கு வழங்கிய நேர்காணலின் போது கூட ஒன்றிப்பு பங்கேற்பு பணி என்னும் மூன்றும் கூட்டொருங்கியக்கத் திரு அவை மிக முக்கியமான பணி என்று நம் திருத்தந்தை இடித்துரைத்தார்.

**முடிவுரை**

தெளிவான சிந்தனையும் கருணைமிக்க தலைமைத்துவப் பண்பும் கொண்டு மக்கள் உடன் பயணிக்க விருப்பம் கொண்ட ஓர் புதிய திருத்தந்தை நமக்கு ஒரு நல்ல மேய்ப்பனாகக் கிடைத்திருப்பது இறைவன் நமக்குத் தந்த ஓர் கொடையாகும். இறைவனுக்கு நன்றி கூறுவோம். புனித அகுஸ்தீனார் சபை ஆன்மீகமும் பெருநாட்டில் இரண்டு சகாப்தங்களுக்கு மேலாக அவர் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்குச் செய்த பணியும் இன்று அவரை மிகப்பெரும் பணியுடன் கூடிய ஓர் உயரிய நிலைக்கு உயர்த்தியுள்ளது. கூட்டொருங்கியக்கம் சுற்றுச்சூழலுக்கான நீதி மற்றும் ஏழைகளுக்கான சார்பு நிலை என்பனவற்றில் இவரின் நிலைப்பாடுகள் நம் முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸை நம் மனக்கண் முன் கொண்டு வருகின்றது. எனவே இவரின் காலம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பணிக்காலத்தின் ஓர் தொடர்ச்சியாகும் என்பதை கட்டியம் கூறுகின்றது. ஆனால் அவர் 14ம் லியோ என்கின்ற பெயரை எடுத்ததின் காரணமாக சமூக நீதிக்கான அழுத்தம் இவரின் பணிக் காலத்தின் முக்கிய அம்சம் ஆகும்.

# திருத்தந்தை 14 ஆம் லியோ!

புதிய திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள, 69 வயதுடைய, கர்தினால் ராபர்ட் பிரான்சிஸ் ப்ரவோஸ்ட் அவர்கள் கத்தோலிக்கத் திருச்சபையின் 267 ஆவது திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

புனித அகுஸ்தினார் சபையைச் சார்ந்த முதல் திருத்தந்தை என்னும் புகழைப் பெற்ற திருத்தந்தை அவர்கள், பதினான்காம் லியோ (Leo XIV) என்னும் பெயரினை தனது பெயராக ஏற்றுள்ளார். மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்குப் பின் திருச்சபைக்கப் பொறுப்பேற்கும் அமெரிக்க கண்டத்தைச் சேர்ந்த இரண்டாவது திருத்தந்தையாவார். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வடக்குப் பகுதியில் பிறந்து தெற்கில் பணியாற்றிய பெருமைக்குரியவர். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் கல்லோ மறைமாவட்டத்தின் அப்போஸ்தலிக்க நிர்வாகியாகவும், திருப்பீட ஆயர்பேரவைக்கான தலைவராகவும், இலத்தீன் அமெரிக்காவிற்கான திருப்பீட ஆணையத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டவர்.

1955 -ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், சிகாகோவில் உள்ள இல்லினோய்ஸ் என்னுமிடத்தில் பிறந்தவர். இவரது தந்தை Louis Marius Prevost பிரெஞ்சு மற்றும் இத்தாலிய மொழி பேசும் வம்சாவளியைச் சார்ந்தவர். தாயார் Mildred Martínez இஸ்பானிய மொழி பேசும் வம்சாவளியைச் சார்ந்தவர். இவருக்கு Louis Martín மற்றும் John Joseph என்னும் இரண்டு சகோதரர்கள் உள்ளனர்.


தனது குழந்தைப் பருவத்தையும், இளமைப் பருவத்தையும் அமெரிக்காவில் கழித்த திருத்தந்தை அவர்கள், முதலில் புனித அகுஸ்தீன் சபையின் இளங்குருமடத்தில் கல்வி கற்றார். அதன்பின்னர், பென்சில்வேனியாவில் உள்ள வில்லானோவா பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றார். 1977 -ஆம் ஆண்டில் அப்பல்கலைக் கழகத்தில் கணிதத்திலும் தத்துவ இயலிலும் பட்டம் பெற்றார். அதே ஆண்டு செப்டம்பர் 1 ஆம் நாள் சிகாகோவில் உள்ள செயிண்ட் லூயிஸில் உள்ள அகுஸ்தீன் (OSA) துறவற இல்லத்தில் இணைந்து துறவறப் பயிற்சி பெற்றார். 1978-ஆம் ஆண்டு செப்டம்பர் 2, அன்று தனது முதல் வார்த்தைப் பாட்டினையும், 1981- ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29, அன்று அவர் தனது நிரந்தர வார்த்தைப்பாட்டினையும் அளித்தார்.

சிகாகோவில் உள்ள கத்தோலிக்க இறையியல் ஒன்றியத்தில் இறையியலில் பட்டம் பெற்ற திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், தனது 27 ஆவது வயதில் உரோமில் உள்ள ஆஞ்சலிக்கம் திருப்பீடப் பல்கலைக்கழகத்தில் திருச்சபைச் சட்டம் பயில்வதற்காக அனுப்பி வைக்கப்பட்டார். பின் 1982 -ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் நாள், சாந்தா மோனிகாவின் அகுஸ்தினியானோ கல்லூரியில் பேராயர் துநயெ துயனழவ அவர்களால் குருத்துவ அருள்பொழிவு செய்யப்பட்டார்.

1984 - ஆம் ஆண்டு முதுகலைக் கல்வியைப் பெற்ற திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்கள், அடுத்த ஆண்டு (1985) தனது முனைவர் பட்ட ஆய்வறிக்கையைத் தயாரிக்கும்போது, பெருவின் பியூராவில் உள்ள சுலுகானாஸிற்கு அகுஸ்தீன் சபை மறைப்பணிக்காக (1985-1986) அனுப்பப்பட்டார். 1987 -ஆம் ஆண்டில், தனது முனைவர் பட்ட ஆய்வறிக்கையை சமர்ப்பித்த திருத்தந்தை அவர்கள், இல்லினோய்ஸின் ஒலிம்பியா ஃபீல்ட்ஸில் உள்ள "நல் ஆலோசனை அன்னை" என்ற அகஸ்டினியன் மறைமாநிலத்தின் இறைஅழைத்தல் இயக்குநராகவும், மறைப்பணி இயக்குநராகவும் நியமிக்கப்பட்டார்.

1999 -ஆம் ஆண்டில் அவர் சிகாகோவின் அகுஸ்தீன் சபை மறை மாநிலத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் இரண்டரை ஆண்டுகளுக்குப் பின் அகுஸ்தீன் சபைத் தலைவராக முதன்முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் 2007- ஆம் ஆண்டு இரண்டாவது முறையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


2013-ஆம் ஆண்டு தனது சிகாகோ மறைமாநிலத்திற்குத் திரும்பிய திருத்தந்தை அவர்கள், சபையின் முதல் ஆலோசகர், இறைஅழைத்தல் இயக்குநர் என பல பொறுப்புக்களை ஏற்றார். 2014 -ஆம் ஆண்டு நவம்பர் 3 -ஆம் நாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் பெருவின் சிக்லாயோ மறைமாவட்ட அப்போஸ்தலிக்க நிர்வாகியாகவும், அதே நேரத்தில் சுஃபார் மறைமாவட்டத்தின் பட்டம்சார் ஆயராகவும் நியமிக்கப்பட்டார்.



அதே ஆண்டு டிசம்பர் 12 ஆம் நாள் குவாதலூப்பே அன்னை மரியா விழா வன்று அன்னை மரியா பேராலயத்தில் ஆயராக அருள்பொழிவு செய்யப்பட்டார். 2015 செப்டம்பர் 26, அன்று, சிக்லாயோ மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டு, 2018 மார்ச் மாதம் பெரு மறைமாவட்ட ஆயர் பேரவையின் இரண்டாவது துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், அதில் அவர் பொருளாதார கவுன்சிலின் உறுப்பினராகவும், கலாச்சாரம் மற்றும் கல்வி ஆணையத்தின் தலைவராகவும் பொறுப்பேற்றார்.

திருஅவையின் புதிய திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்களின் பணி சிறக்க தொடர்ந்து செபிப்போம்.

**தந்தை தஞ்சை டோமி**




# லியோ XIV திருஅவைக்கான
## புதிய காலகட்டத்திற்கு ஒரு தலைமை

2025 மே 8ஆம் திகதி கத்தோலிக்க திருஅவையின் வரலாற்றில் ஒரு முக்கிய மான நாள் என்று குறிக்கப்பட்டுள்ளது. சிகாகோவில் பிறந்த 69 வயதுடைய கார்டினல் ராபர்ட் பிரான்ஸிஸ் பிரிவோஸ்ட், புதிய திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர் "திருத்தந்தை லியோ XIV என்ற பெயருடன், கத்தோலிக்க உலகின் ஆன்மீகத் தலைவராகப் பொறுப்பேற்றார்.

இது திருஅவைக்கே ஒரு புதிய திசையும், புதிய நம்பிக்கையின் விளக்காகும். புனித பேதுரு பேராலயத்தின் கட்டிடத்தின் முன், செயல் தலைவர் கார்டினல் டொமினிக் மாம்பெர்டி, "ஹபெமஸ் பாப்பம்" என மகிழ்ச்சியுடன் அறிவித்தார். இதன் பிறகு தோன்றி மக்களுக்குத் தனது முதலாவது ஆசீர்வாதத்தை வழங்கிய திருத்தந்தை லியோ XIV புன்முறுவலுடன் கைகளை அசைத்துப் பரிசுத்தமான பாசத்துடன் மக்கள் முன் நின்றார். இசை, கண்ணீர், ஜெபத்தோடு மக்கள் அவரை வரவேற்றனர். உலகம் முழுவதும் கத்தோலிக்கர்கள் இதனை ஆன்மீக மகிழ்ச்சியோடு எதிர்கொண்டனர்.

1955 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 14ம் திகதி அமெரிக்காவின் சிகாகோவில் பிறந்த ராபர்ட் பிரிவோஸ்ட், 1977 இல் புனித அகஸ்டின் சபையில் இணைந்தார். 1981 இல் தனது நித்திய வாக்குறுதியை அளித்தார். அவர் வில்லனோவா பல்கலைக்கழகத்தில் கணிதத்தில் பட்டம், சிகாகோவில் உள்ள Catholic Theological Union இல் திவ்ய பாராயணத்தில் மாஸ்டர் பட்டம் மற்றும் ரோமில் உள்ள புனித தோமஸ் அக்குவைனஸ் கல்லூரியில் திருஅவைச் சட்டத்தில் உயர் பட்டங்களைப் பெற்றுள்ளார். இந்தக் கல்விப் பயணம் அவருடைய ஆன்மீக ஊக்கம் மற்றும் கத்தோலிக்க மூலத்துவங்களில் உள்ள ஆளுமையை வெளிக்காட்டுகிறது.

1982 இல் குருவாகத் திருநிலைபடுத்தப்பட்ட பின் பேருவில் உள்ள சுலுகனாஸ் பகுதியில் ஆகஸ்டினிய மிஷனில் பணியாற்றினார். அவரின் பணிகள் அந்தப் பகுதியில் ஏழைகளுக்கான கல்வி, நலவாழ்வு மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமாக இருந்தன. பின்னர் ட்ருஜில்லோவில் உள்ள ஆகஸ்டினிய அரச பாடசாலைத் தலைவராகப் பணியாற்றியதுடன், பல்வேறு மேய்ப்பு மற்றும் கல்வித் திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். இவருடைய இந்தப் பணிகள் "திருஅவை என்பது மக்களுக்கு சேவை செய்யும் இடமாக இருக்க வேண்டும்" என்ற கொள்கையை முழுமையாகப் பிரதிபலிக்கின்றன. 1999 இல் சிகாகோவுக்குத் திரும்பிய அவர், "மதர் ஆஃப் குட் கவுன்சில்" பிராந்தியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார். 2001ம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை ஆகஸ்டினிய ஆணையத்தில் அதிபராக இரண்டு தவணைகள் பணியாற்றினார். அவருடைய தலைமையில் சமூக நீதி, கல்வி மற்றும் மேய்ப்புச் சபை தொடர்பான பங்களிப்புகள் அதிகரிக்கப்பட்டன. அவருடைய நிர்வாகத் திறனும், பணிவும், திருஅவையின் தொண்டுப் பணிக்கு புதிய ஊக்கத்தையும் நம்பிக் கையையும் வழங்கின.

2015 இல் திருத்தந்தை ஆயர் பிரான்சிஸ் அவர்களை பேருவில் சிக்லாயோ ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டார். அந்த நேரத்தில் பேருவில் அரசியல் குழப்பங்கள் நிலைவியபோதும், அவர் திருஅவையின் ஒற்றுமை மற்றும் அமைதிக்கான ஒரு நிலையான குரலாகத் திகழ்ந்தார். அவரின் வழிகாட்டுதலில் திருஅவை சமுதாயத்தில் நடுநிலையான அரங்கமாக மாறியது. 2003 இல் ஆயர் பிரான்சிஸ் அவரை ஆயர்களுக்கான தலைவராக நியமித்தார். இந்தப் பதவியில், உலகம் முழுவதும் ஆயர்களைத் தேர்ந்தெடுப்பதில் முக்கிய பங்கு வகித்தார். அவரின் ஞானமும் அமைதியான செயல்முறையும், திருஅவையின் மேய்ப்புப் பணியில் அவருக்கு முக்கியத்துவம் அளித்தது. அதே ஆண்டின் செப்ரெம்பரில் அவரை கர்தினால் நியமித்து திருத்தந்தையர் அவரிடமுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடாகும்.

புதிய திருத்தந்தையான லியோ XIV ஆயராக இருப்பது அரண்மனையில் இருப்பது அல்ல. மக்களிடம் சேவை செய்வதற்கான அழைப்பு என்பதில் உறுதியுடன் உள்ளவர். அவருடைய பணிவும், பரிசுத்தமும், திருஅவையை உண்மையான கிறிஸ்தவ இயேசுவின் சேவையின் பாதையில் அழைத்துச் செல்லும் திறமையும், அவரை ஒரு ஆன்மீகத் தந்தையாக மாற்றுகின்றன.

13ஆம் நூற்றாண்டில் ஆயர் அலெக்சாண்டர் IVக்கு பின் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டாவது ஆகஸ்டினியராக திருத்தந்தை லியோ ஆண்டவை கத்தோலிக்க திருஅவையின் எதிர்கால வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கப் போகிறார். உலகம் முழுவதும் கலந்துரையாடலுக்குத் தேவையான நேரத்தில் அவர் அமைதி, ஒற்றுமை மற்றும் சமூக நீதி ஆகியவற்றை முன்னிறுத்தும் தலைமையைக் கொண்டுவரப் போகிறார். திருத்தந்தை லியோ XIV என்னும் புதிய தலைமை கத்தோலிக்க உலகிற்கு ஒரு புதிய ஊக்கம், புதிய தேடல் மற்றும் புதிய நம்பிக்கையை அளிக்கின்றது. அவரது வாழ்க்கை மற்றும் சேவை ஏழைகளுக்கிடையே இடர்காலங்களில் அமைதிக்காக மற்றும் உண்மையான மேய்ப்பர் பணிக்காக ஒரு அர்ப்பணிப்பாக இருந்தது. அவருடைய தலைமையில் திருஅவை ஒரு பதிய பரிசுத்த பயணத் தைக் காணும் என்னும் நம்பிக்கையோடு உலகம் முழுவதும் கத்தோலிக்கர்கள் இன்று மகிழ்கிறார்கள்.

**அருட்சகோதரி வினோலி**
**திருச்சிலுவைக் கன்னியர் சபை**

**சிந்திக்க...** வாழ்க்கை எனும் விதை விதைத்து எம்மை வாழ அழைத்த இறைவன் ஏன் வீழ்ச்சி, எழுச்சி எனும் இரு நபர்களை எம் கூடவே பயணிக்கச் செய்தார். வீழ்ந்தவுடன் எனக்கு என் நண்பன் உதவினான் என்று கூறுவதை விட "வீழ்ந்தேன் என் நண்பனின் உதவியுடன் எழுந்தேன். கடவுள் அவர் சார்பில் என் அருகில் செயலாற்றினார்" எனக் கூறுவோர்கள் அதிகமானால் வீழ்ச்சி எனும் நபர் எழுச்சியுடன் இணைந்து மிகுந்த கனிதருவார். வீழ்ச்சி என்பது, கடல் அலை போல் உயர்ந்தாலும் இறுதியில் உன்னால் நீந்த முடியும் எனில் உன்னைத் தாழ்வாகக் கொண்டு வந்து எழுச்சி எனும் கரையைக் காட்டிவிடும். உன்னை வடிவமைத்த கடவுள் பல வர்ணங்களை உன்வாழ்வில் தீட்டினார். ஆனால் முழுமையான கருமை எனும் வர்ணத்தைத் தீட்டவில்லை. சரியோ, தவறோ உன் வாழ்க்கை எனும் புத்தகத்தை எழுதும் எழுது கோலை உன் கையிலே வைத்துக்கொள். பிறர் கையில் கொடுத்தால் கிறுக்கித் தள்ளி விடுவர்கள் என ஹிட்லர் கூறியுள்ளார். எனவே வீழ்ந்தாலும் வாழ்வின் நோக்கம் மாறாது நம்பிக்கையுடன் எழுந்து எதிர்த்து நடப்போம்.

# தியாகச்சுடர் அருட்குருவர் பிரான்சிஸ் ஜேசப்
# கிறிஸ்துவின் பலிக் குருத்துவத்தில் காவியமானவர்



யாழ் மறைமாவட்டக் குருவாகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, பணிக்குருத்துவத்தை பலிக்குருத்துவமாக வாழ வேண்டுமென்ற வாஞ்சையுடன் அர்த்தமுள்ள குருத்துவத்தில் தன்னைக் கரைத்துக் காவியமான அருட்தந்தை பிரான்சிஸ் யோசப் அடிகளாரைப் புனித பத்திரிசியார் கல்லூரிக் கும்பம் தன் ஆசிரியராகவும் அதிபராகவும் பெற்றது அக் கல்லூரிக்குக் கிடைத்த உன்னத பாக்கியமென்றால் அது மிகையாகாது.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்கிறது தமிழ் போற்றும் உலக நீதி. இதற்கு வாழ்வினால் பாடம் புகட்டியவர் தான் அருட்குரவர் பிரான்சிஸ் யோசப் அடிகளார் பெயருக்குரிய ஆளுமை மனிதம் அவரில் மிளிர்ந்தது. புனித பிரான்சிஸ் அசீசியார் போல எளிமையான கண்ணியமான வாழ்வால் பாடசாலை மாணவ மணிகளுக்கு விசுவாச ஒளிக்குடரை ஏற்றி அணையாது காத்தவர்.

புனித யோசப் (சூசையப்பர்) போல புனித பத்திரிசியார் குடும்பத்தைக் காக்கும் அரணாக ஒரு உத்தம நீதிமானாக அணிவகுத்துச் சென்றவர். கம்பீரமான, நேர்த்தியான நடைத் தொனியில் ஆளுமையில் உறுதி பேச்சில், நேர்மை செயற்பாட்டில் பொறுப்பும் கடமையுணர்வும் அவரில் வெள்ளிடைமலையாக வெளிப்பட்டது. கண்டிப்புடன் கூடிய கரிசனையும், தந்தைக்குரிய அன்பும் காண்போருக்கெல்லாம் துலாம்பரமாக அவரில் வெளிப்பட்டன.

ஒழுக்கமென்றால் என்ன என்பதற்கு வரைவிலக்கணமாகத் திகழ்ந்த அருட்தந்தை தியாகமென்றால் என்ன என்பதையும் தன் வாழ்வின் இறுதியில் காட்டி விட்டுச் சென்றார். அன்று கல்லூரியில் உருவான குருமடமாணவர்களுக்கும் ஏனையோருக்கும் ஒரு குருவானவர் உண்மையில் எப்படி வாழவேண்டுமென்பதற்கு ஓர் முன் உதாரணமாகத் துலங்கியவர்: என்பதை அவரிடம் கற்றுக்கொண்ட அவரின் மாணவக் குருக்கள் நன்கு உணர்ந்திருக்கின்றனர். மிகுந்த நெருக்கடியும், சவாலும் நிறைந்த காலத்தில் புனித பத்திரிசியக் குடும்பத்தை மட்டுமன்று, ஒட்டுமொத்த சமூகத்திற்கும் ஓர் உன்னத உறுதியான முன் உதாரணமாக வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

மனித உணர்வுகளை மதிக்கவும், நீதியின் பக்கம் நிற்கவும், தவித்தவர்களைத் தேற்றி இரக்கம் காட்டவும், கொள்கைகளில் உறுதியோடு செயற்படவும் தன்னைக் கிறிஸ்துவுக்குள் ஒன்றாக்கிக் காவியமானார்.

இலங்கை அரச இயந்திரத்தால் 1980 ஆம் ஆண்டு தமிழர்கள் இனரீதியாக ஒடுக்கப்பட்ட காலம் தொடர்ந்து 1987ஆம் ஆண்டு அமைதிப்படை என்ற இந்திய இராணுவத்தினர் தமிழர்களைக் கொடுமைப் படுத்திய இக்கட்டான காலப்பகுதியில் கல்லூரி மாணவன் ஒருவரும் இந்திய இராணுவத்தால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். 1990ஆம் ஆண்டு

> **மாதா, பிதா, குரு, தெய்வம் என்கிறது தமிழ் போற்றும் உலக நீதி. இதற்கு வாழ்வினால் பாடம் புகட்டியவர் தான் அருட்குரவர் பிரான்சிஸ் யோசப் அடிகளார் பெயருக்குரிய ஆளுமை மனிதம் அவரில் மிளிர்ந்தது. புனித பிரான்சிஸ் அசீசியார் போல எளிமையான கண்ணியமான வாழ்வால் பாடசாலை மாணவ மணிகளுக்கு விசுவாச ஒளிச்சுடரை ஏற்றி அணையாது காத்தவர்**

இலங்கை இராணுவத்தினர் யாழ் நகரில் மக்களின் குடியிருப்புக்கள் மீது குண்டு மாரி பொழிந்து, புனித பத்திரிசியார் கல்லூரிக் கட்டடங்களையும் தகர்த்துச் சேதப்படுத்திய மிகக் கொடுமையான காலப்பகுதியிலும், துணிவோடும், உறுதியோடும், கரிசனையோடும் கல்லூரிக் குடும்பத்தை ஓர் பொறுப்புள்ள தந்தையாகக் கண்காணித்துப் பாதுகாத்து, தளராமல் கல்விச் சுடரை அணையாமலும், ஒழுக்க உருவாக்கம் குன்றாமலும் காத்தவர் அருட்தந்தை பிரான்சிஸ் ஜோசப் அடிகளார்.இறைவன் எமது மறைமாவட்டத் திற்கும், தமிழ் சமூகத்திற்கும் மானிட சமூகத்திற்கும் கொடுத்த ஓர் உன்னத கொடையென்றால் அது மிகையாகாது. "நானே திராட்சைச் செடி நீங்கள் அதன் கிளைகள்" (யோவான் 15:1) என்ற நற்செய்தி வாக்கு ஒரு கிறிஸ் தவனுக்கு அடிப்படையான விசுவாச வாழ்வுக்கு அடித்தளம் என அதன் அர்த்தம் உணர்ந்து அதனைப் பாடலாக்கி அதற்கு இசையமைத்து அதைத் தாமே கல்லூரி மாணவருக்குப் பாடக் கற்றுக்கொடுத்து அதன் உண்மை அர்த் தத்தை எம் இதயங்களில் ஊட்டி இயேசுவில் வேரூன்றக் கற்றுத் தந்ததை இன்னும் அவரின் மாணவர்கள் நினைவில் வைத்துள்ளனர்.

இத்தகைய மகான் இயேசுவின் மற்றொரு விசுவாச சாட்சியாக 2009 மே மாதம் இறுதிப் போரில் வன்னியில் சிறிலங்காவின் அரச கயவர்களால் காணாமல் ஆக்கப்பட்டு, காவியமானார். அவர் மறைக்கப்பட்டாலும் அவரின் சாட்சிய வாழ்வின் உண்மை ஒருபோதும் மறைக்கப்படாது. நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கைகளில் உள்ளன. அவர்கள் மங்காத் தாரகைகளாக எக்காலத்திற்கும் ஒளிவீசுவார்கள். கிறிஸ்துவுக்குப் புகழ் மரியே வாழ்க!

**யே. அ. அருள்தாசன்**

# திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களது பத்துக் கற்பனைகள்

**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருஅவையில் வாழ்வியலுக்கு வழங்கிய பத்துக் குறும் கற்பனைகள். "திருஅவை எவ்விதமாக இருக்கவேண்டுமென்று மக்கள் விரும்பினார்களோ அதே திருத்தந்தையின் குரலாக அமைந்தது.**



**1) மறைப்பணியாளர்களுக்கு:**

மறைப்பணியாளர் எப்பொழுதும் மந்தையின் மணவாடையைக் காவியவர்களாக (EG24) இருக்க வேண்டும். இம்மறைப்பணியாளர்கள் ஒரு சாவு வீட்டிற்குச் சென்று திரும்பியவர்களாக இருக்கக்கூடாது (EG10).

**2) அவரது கனவுத் திருஅவை:**

நான் ஒரு காயப்பட்ட, அழுக்குப் படிந்த திருஅவையைப் பார்க்க விரும்புகிறேன். ஏனெனில் அது தெருக்களில் நடமாடும் திருஅவை அதை விடுத்து தனது பாதுகாப்பு வலயங்களில் பற்றுக்கொண்டு வாழ்வது ஆரோக்கியமல்ல. (EG49) திரு அவையினருக்கு முக்கிய கடமை ஒரு மருத்துவனையைப்போல் உடனடியாக பிரச்சினைக்குத் தீர்வு காணமுயல வேண்டும் (AZ292) வறியவர்களுக்கான, வறியவர்களுடன் வாழும் திருஅவையை விரும்புகிறேன். (EG198)

**3) குருக்களுக்கு:**

நான் குருக்களுக்கு நினைவுபடுத்த விரும்புவது ஒப்புரவு அருட்சாதனக் கூடு ஒரு வதைக்கும் நாற்காலியல்ல (EG44) இது சாவு வீடு அல்ல. இறைத்தந்தையின் இல்லிடம். அனைவருக்கும் தமது மனக்கீறல்களைக் குணமாக்க இடமுண்டு (EG47) குருக்களுக்கு ஒரு மேலாண்மைவாதம் (Clericalism) ஒரு தொடர் சோதனை அதாவது அதிகாரத் தோரணையில் வாழ்வை அமைத்துக் கொள் வது - தாராள மனத்துடன் பணியாற்றத் துணிய வேண்டும். நாம் ஒரு குழுவிற்கு உரிமையானவர்கள் எனவே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கொடுக்கலாம் என்றெண்ணாமல் அடுத்தவர் கூறுவதைக் கவனமுடன் கேட்கப் பழகவேண்டும் (EV98).

**4) இறையியலாளருக்கு:**

இறையியலாளர்கள் ஒரு மேசை நாற்காலிகளுக்குள் கட்டுண்டு இறையியலாக்கம் செய்வதில் திருப்தி காணவேண்டாம்.

**5) ஆலய மறையுரைஞர்களுக்கு:**

அர்த்தமுள்ள மறையுரைக்கு ஒரு கருத்தியல், ஒரு உணர்வுமைய சிந்தனை, ஒரு படிமம், 8 நிமிடங்களுக்குப் பின் மக்கள் கேட்கும் தன்மை இழந்து விடுவார்கள். அத்துடன் புரிந்து கொள்ளப்படுவதுமில்லை. 10 நிமிடங்களுக்கு அப்பால் செல்ல வேண்டாம் (மறைக்கல்வி 2024).

**6) குடும்பங்களுக்கு:**

குடும்பச் செபத்திற்கான சில நிமிடங்கள் காத்திரமானது, மிகவும் சக்தி வாய்ந்தது. இது மறைப்பணிசார் உரைகளை விட உன்னதமானது (AL227) எனது பிழையை மன்னியுங்கள் என்று ஒருவர் ஒருவருக்குக் கூறுவது நலம்.

**7) பெண்ணியம்:**

பெண்ணியத்தைப் பெறுமதியாக உணரவேண்டும். அவர்களது வேறுபாடுகள், குண இயல்புகள் ஒன்றாக இருக்க வேண்டியதில்லை (AZ 173) அவர்கள் தான் உயிர்ப்பின் சாட்சிகள் அத்துடன் இறை நம்பிக்கையின் சாட்சிகள். ஆலயத்திற்குச் செல்லும் பெரும்பான்மையினர்.

**8) ஆயர்களுக்கு - மறைமாவட்டம்:**

உங்களுக்குப் பிரமாணிக்கமாக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. நான் வேண்டுகிறேன் நீங்கள் மக்களோடு தங்கி இருக்கவும் "விமானத்தள ஆயர்களாக, (Airport Bishop's)_ சுற்றுலாவிகளாக இருக்கவேண்டாம். (புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட ஆயர்களுக்கு 2013, வத்திக்கான்)

**9) பெண் துறவிகளுக்கு:**

பெண் துறவிகளைப் பார்க்கும்பொழுது நான் பல தடவை ஏமாற்றமடைந்துள்ளேன். அவர்கள் மகிழ்ச்சிக்குரியவர்களாக காணப்படுவதில்லை. அவர்களது புன்னகை விமானத்தில் பணிப்பெண் போல் தோன்றுகின்றது. மகிழ்ச்சி நிறைவின் புன்னகையாக ஆழ் மனதிலிருந்து வரவேண்டும். (திருத்தந்தை துறவிகளுக்கு 2013) துறவிகள் மடம் வேதனை அனுபவிக்கும் உத்தரிப்புக் களம் அல்ல. ஆனால் ஒரு குடும்ப உறவில் ஈடுபாட்டுடன் வாழப் பழகவேண்டும்.

**10) இயற்கை வளம்:**

நாம் காணும் பாலைவனங்கள் வளர்ச்சியடைகிறது. ஏனெனில் மனிதர்களின் மனங்கள் வரட்சியாகிறது. எனவே சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒவ்வொரு மனிதப் பிறவியிலும் சார்ந்துள்ளது (LS118).

**எழுத்துக்களால் வடித்த அவரது ஐந்து காவியங்கள் :**

- மகிழ்வில் நற்செய்தி
- புகழ் அனைத்தும் உனக்கே
- வாழும் கிறிஸ்து
- அன்பில் முகிழ்ந்த மகிழ்வு
- கூட்டொருங்கியக்கின் இறுதிக் கோர்வை

**கோர்வை : அமிர்த யெயசேகரம்**

# நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பல்துறை ஆளுமைப் பணிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி...)

**புதிய கிறிஸ்தவர்கள்**

'மறைபரப்பு' என்ற பதம் முற்றிலும் வலு வந்தமானதொரு சார்பு நிலையை மனங்களில் ஏற்படுத்துவதாகும் என்பது அதைப் புரிந்து கொள்ள முற்படுவர்களுக்கு நன்றாக விளங்கும். அதாவது கிறிஸ்தவத்திற்கப்பால் அனைத்து சமயநெறிகளும் சாத்தானின் நெறிகள் எனவும் கிறிஸ்தவம் ஒன்றே உண்மையான மறை எனவும் ஐரோப்பிய ஆட்சியாளர்கள் 'தனிச்சமய முதல் வாதத்'தால் தூண்டப்பட்டதாகவே தொடக்கத் திருஅவையின் காலம் முதல், கிறிஸ்தவ இறைவெளிப்பாட்டின் விதைகள் ஏனைய மறைகளிலும் தூவப்பட்டுள்ளன என்று சொன்ன இரண்டாம் வத்திக்கான் சங்கக் காலம் வரை திரு அவையின் புரிதல் இருந்தது.

**நல்லூர் சுவாமி**

சொந்த மண்ணிலேயே உருவானதும் மில்லியன் கணக்கான மக்களிடம் வேரூன்றப்பெற்றதும் பாரிய பக்தி இலக்கிய பாரம்பரியத்தைக் கொண்டதும் மிகவும் நுணுக்கமான நாளாந்த சடங்காசாரங்கள் மற்றும் கலைநயங்களால் மெருகூட்டப்பட்டதுமானதொரு சமய முறைமைகளைக் கொண்ட மக்களைக் கவர்ந்து, அவர்கள், வேறொரு, இந்நாட்டிற்கே அன்னியமான சமயத்திற்கு மனமுவந்து மாறுவதென்பது மிகவும் கடினமானதொன்றாகும். இங்கு மறையறிவிப்பாளரின் முதற்பணி அனைத்து விதமான தப்பபிப்பிராயங்களையும் கேட்போரின் மனங்களில் இருந்து அகற்றுவது. அடுத்ததாகக் கேட்போருக்கே பழக்கமான விடயங்களூடாகக் கொடுக்க வேண்டிய விடயங்களை வழங்குவது. அருட்பணி. ஞானப்பிரகாசர் இதனை நன்கறிந்திருந்ததோடு இந்து சமய ஆசாரங்கள் மற்றும் சைவ சமயத் தத்துவங்கள் இம்மண்ணின் பண்பாடுகள் மனநிலைகள் என்பவற்றையும் அறிந்திருந்தார்.

மேலும் இவர் ஓர் இந்துவாக இருந்ததினாலும் சாதாரண பாமரமயப்படுத்தப்பட்ட, தத்துவாந்த மெய்யியல் ரீதியான இந்து மதத்தையும் அதன் பாரம் பரியத்தையும் அறிந்திருந்தபடியால் விசேடமாக 1901 முதல் 1925வரையான காலப்பகுதியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருடன் ஏற்பட்ட மறை தொடர்பான சொற்போர்களின் தேவை காரணமாக வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சைவசித்தாந்த தர்க்கவியல் நெறிகளை இவர் கற்று அவற்றைப் பயன்படுத்தியபடியால் இவரது கருத்துக்கள் பலராலும் வரவேற்கப்பட்டன. அத்தோடு இவரது எளிமையான துறவற வாழ்வு இந்து சன்னியாச நிலையுடன் ஒத்துப்போய் இருந்தபடியால் இவரை ஒரு 'சுவாமி'யாகவே இந்துக்கள் மதித்ததோடு இவர் கொக்கிளாய் முதல் மூளாய் வரை பணி செய்தாலும் நல்லூரில் தனது தலைமையகத்தை அமைத்திருந்தவேளை அனைத்து மத மக்கள் மத்தியில் சிறந்த சமூகப் பணியாளராகவும் பேரறிஞராகவும் அறியப்பட்டதாலும் உண்மையாக இவர் "நல்லூர் சுவாமி" என்றே அறியப்பட்டார்.

இவரது கடினமான பல பணிகள் மத்தியில் நிலங்களைப் பெறவும் ஆலயங்களைக் கட்டவும் மறையாசிரியர்களுக்கான சம்பளங்களை வழங்கவும் சமயம் மாறிய புதிய கிறிஸ்தவர்களுக்கு அல்லது புகுமுக நிலையினருக்கு மறை தொடர்பான நூல்கள் மற்றும் பெரும்பாலான ஒதுக்கப்பட்ட ஓரங்கட்டப்பட்டவர்கள் பசியென்று வரும்போது உணவு, உடை, உறையுள் வழங்கவும் நிதி கண்டுபிடிப்பதேயாகும். விசேடமாகச் சமய மாற்றம் பெற்றோர் பலவேளைகளில், உயர்சாதியினர் பலரின் நெருக்கடிக் குள்ளாகிச் சொத்தழிப்பு, வீடுகள் எரிப்பு, தோட்டங்கள் சிதைப்பு, பொய்க் குற்றங்கள் சுமத்தி நீதிமன்றங்களுக்கு இழுத்தல், சிறைப்படுத்தல், இரத்தம் சிந்துதல், கொலை செய்யப்படுதல் போன்றவற்றிற்குட்பட்டனர். இவர் ஊடகங்களிலும் பல்வேறு வகைகளில் கடுமையான விமர்சனத்திற்குள்ளானார். வரணி, மூளாய், உரும்பிராய் உட்பட மூன்று தடவைகள் உயிராபத்திற்கும் உள்ளானார். ஒரு தடவை உரும்பிராயில் இவரது கறுப்பு நிற சீருடைக்குத் துப்பாக்கிச் சூடு கிடைத்தது. துப்பாக்கியுடன் நடுங்கிக்கொண்டிருந்தவனை உள்ளிருந்து வந்து மனம்மாற வைத்து அவனை அனுப்பியவர்களே வெட்கப்படும்படி, இறுதிவரை தன் நண்பனாகவே கொண்டிருந்தார். இவர் சிறந்த எழுத்தாளரும் ஆய்வாளருமாக இருந்ததால் இவரது நூல்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மறைப்பணிக்குப் பெரிதளவில் உதவின.

**கிறிஸ்தவனின் பணி**

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்று வாழ்பவனே ஒரு கிறிஸ்தவன். தன்னைச் சுற்றிக் கோபுரம் எழுப்பாது சுவர்களைத் தகர்த்தெறிந்து பகைவனையும் தன் அயலானாக நேசிப்பவனே உண்மையான கிறிஸ்தவன். "எனக்குத் தெரியாது. நான் என்ன, என் சகோதரனுக்குக் காவலாளியோ?" என்று கேட்பவன் கிறிஸ்தவன் அல்ல. எந்நிலை வரினும் அயலவரிலே பரிவன்பு கொண்டு அரவணைத்து அவர்களை உயர்த்துவதே கிறிஸ்தவமாகும். ஒருவர் மனுக்குலத்துக்காகக் கிறிஸ்துவில் தன் முழு



வாழ்க்கையையும் அர்ப்பணித்து மீண்டும் மனுக்குலம் கிறிஸ்துவில் மகிமைபெற உயிர்பெற்று எழுவதே கிறிஸ்தவமாகும். இந்தியாவின் அண்ணல் காந்தி, அம்பேத்கார், பெரியார், அறிஞர் அண்ணா, அன்னை தெரேசா போன்றவர்களைப் போல இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் துணிவும் நேர்மையும் தொலை நோக்கும் கொண்டு சமுதாயத்தின் பின்தங்கியவர்களுக்குத் தன்வாழ்வை முற்றாகவே இவர் அர்ப்பணித்தார்.

புல்லுக்குச் சமமாகக்கூட மதிக்கப்படாமல் இருந்த தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்துவதையே நோக்காகக் கொண்ட துறவி ஞானப்பிரகாசர் மனம் நொந்து கூறிய வார்த்தைகள் இவை. "பிற்படுத்தப்பட்ட மக்கள் உங்கள் சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்று நீங்களே பெருமை பாராட்டுவதில்லை. வழிபாட்டிற்கு உங்கள் கோவில்களைத் திறந்து விடுவதில்லை. எங்கள் ஆலயங்களிலாவது அவர்கள் வந்து வழிபாடு நடத்தட்டும்." இவ்வாறான இவரது முழக்கத்தை இன்று நோக்கும் போது தனது சமயமாற்றம் கானல் நீரானதோ? என்று அழுது புலம்பியிருப்பார். ஏனென்றால் தம்மை உயர் சாதியினர் என்று மார் தட்டுபவர்கள் தமக்கிடையே சாதிப் பிளவுகளுடன் கோவில்களைக் கொண்டிருப்பது ஒரு புறமிருக்க, மறுபுறம் பிற்படுத்தப்பட்டவர்களே தமது ஆலயங் களுக்கு அருகில் இருப்பவர்களைத் தமது ஆலயங்களில் சேர்க்காமலும் குடும்பப் புத்தகங்கள் வழங்காமலும் இருக்கின்றனர் என்பது இன்றைய பல பங்குத் தந்தையர்களின் கசப்பான அனுபவமாகும். புதிய மறையை அறிவிப்பதில் புனித பவுலைப் போலவும் நீண்ட பயணங்களை மேற்கொள்வதில் புனித சவேரியாரைப் போலவும் பல்வேறு துன்பங்களையும் தாங்கிக்கொண்டார்.

**தலைமகளும் தாயுள்ளமும்**

இவர் பணிசெய்த உரும்பிராய்க் கிராமம் இவரது தலைமகள் எனப் போற்றப்படுகின்றது. 1916இல் ஓலைக் குடிசையாக ஒரு கோவிலைக்கட்டி 107 பேர்களைக் கத்தோலிக்க மறையில் சேர்த்தார். "நாங்கள் நெடுங் காலம் ஆடு, கோழி வெட்டி அலுத்துப் போனோம். எங்களுக்குப் பேயின் மாயங்கள் எல்லாவற்றையும் வெல்லக்கூடிய ஒரு புனிதருடைய கோவில் தான் வேண்டும்" என்று இவர்கள் கேட்டபோது அப்படியானால் புனித மிக்கேல் அதிதூதர்தான் உங்களுக்குப் பொருத்தமானவர் என்றார். இக்கிராமத்தில் இருந்து தம்மைப் புதிய மறையில் சேர்க்குமாறு முதன் முதலில் வந்துகேட்ட மூன்றுபேர் தம்மிடம் வந்த நாளும், தான் 1905இல் நல்லூர் பணித்தளத்தைப் (கத்தோலிக்கரல்லாதோரைப் புதிய மறையில் சேர்க்க) பொறுப்பேற்ற நாளும் செப்ரெம்பர் 29 என உணர்ந்து இறை பராமரிப்பைப் போற்றிப் புகழ்ந்தார். அன்று முதல் அதிதூதரே அவ்வாலயம் எழுப்பப்பட்ட இடமாகிய சுடுகாட்டு நிலத்தையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்கின்றார்.

**அருட்பணி. கு. யே. அன்ரனிபாலா**

புதிய கத்தோலிக்கர் தொடர்பாக அடிகளார் கொண்டிருந்த தாய்மைக்குரிய மனநிலையை இரண்டு சம்பவங்களூடாகக் காணலாம். உரும்பிராயில் எழுந்த உயிராபத்துக்கள் காரணமாக ஆயர் யூலன் ஆண்டகை "கொந்தளிப்பு அடங்கும் வரை அவ்வூரில் இருந்து வேறிடஞ்சென்று உமது வேலையைத் தொடங்கலாமே" என்று கூறியபோது "புது ஆடுகளை ஆபத்தான நிலையில் விட்டு மேய்ப்பவன் விலகுவது கோழைத்தனம். எனது உயிருக்கே ஆபத்து நேர்ந்தாலும் நான் அவ்வூரை விட்டு விலக எண்ணவில்லை. நீங்கள் ஆணையிட்டால் அதற்குப் பணிய நான் தயாராய் இருக்கிறேன்" என்றார். அவரது திடகாத்திரமான மனஉறுதி தளம்பாத வீர வார்த்தைகள் ஆயரை மகிழ்ச்சியுறச் செய்ததோடு உரும்பிராய்க்கே அவரைத் திருப்பி அனுப்பத் தூண்டின.

(தொடரும்...)

## மறைப்பணி புரிந்த மாமேதை நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்

**3. மாதா பிதா குரு**

மானிப்பாய் மண்ணில் பிறந்த ஞானப்பிரகாசர், தமது சிறிய தந்தை தம்பிமுத்துப்பிள்ளையின் இடமாகிய அச்சுவேலியில் வளர்ந்தார். அச்சுவேலி புனித சூசையப்பர் திண்ணைப் பள்ளியில் தமது கல்வியை ஆரம்பித்தார். இத்திண்ணைப்பள்ளி நிமிர்ந்து நிற்கத் தூணாய் இருந்தவர்களுள் தம்பி முத்துப்பிள்ளையும் ஒருவர்.

தம்பிமுத்துப்பிள்ளை சிறந்த கல்விமானாகவும், நாடக ஆசிரியராகவும், பதிப்பாசிரியராகவும், பத்திராசிரியராகவும் திகழ்ந்தார். எஸ்தாக்கியார் நாடகம், யோசேப்பு டிராமா, தூமரத நாடகம், சந்தியோகுமையோர் சகாயசபா என்பன இவரின் கைவண்ணத் தினாலான நாடகங்களாகும். பல அற்புதமான நாடகங்களையும், வைத்திய ஏடுகளையும், சமூக, சமய, இலக்கிய, இலக்கண நூல்களையும் வெளியிட்டார். 'சன்மார்க்க போதினி' என்ற பத்திரிகையை அனைத்து மக்களும், எல்லா சமய நம்பிக்கை கொண்டவர்களும் விரும்பிப் படிக்கும் பத்திரிகையாக நாற்பத்தேழு (47) ஆண்டுகள் வெளியிட்ட பெருமை ஞானப்பிரகாசரின் சிறிய தந்தையாராகிய தம்பிமுத்துப் பிள்ளையையே சாரும்.

தம்முடைய சிறிய தந்தையாரைப் பற்றிப் பல இடங்களில் குறிப்பிடுகின்ற சுவாமி ஞானப்பிரகாசர் ஓரிரு இடங்களில், "சிறிய தந்தையார் எனக்குப் பயிற்றுவித்தவை வேறொரு நிரலில் உள்ளவை. ஆண் பிள்ளைக்குரிய தைரியம், எடுத்ததை விடாது முடிக்கும் துணிவு, நேர்மை, மரியாதை, ஈகை இவற்றை மக்களுக்குப் பயிற்றுவதில் அவருக்கு நிகரான தகப்பனைக் காண்பது அரிது என எண்ணுகிறேன். சொன்ன சொல்லை நிறைவேற்றச் செய்வார். பொய், களவின் நிழலும் காணமுடியாது".

"இரண்டொருமுறை உள்ளபடி பொய் இல்லா விட்டாலும் பொய் போலத் தோன்றிய சில வார்த்தைகளுக்காக நல்ல பூசை வாங்கின ஞாபகம் எனக்கு இப்போதும் இருக்கிறது" என்றும், "அவரிடத்தில் படித்த ஈகைப் பழக்கம் இன்றைக்கும் என்கையில் ஒன்றும் வைத்திருக்க விடாமல் செய்து வருகிறது. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பதை நன்றாக உணர்ந்திருக் கொள்கிறேன். இவ்வாறு சிறிய தந்தையினுடைய ஆளுமையின் சிறப்புகளைக் கோடிட்டுக் காட்டுகின்றார். சிறிய தந்தையாரை 'அப்பு' என்று அழைக்கும் ஞானப்பிரகாசர், தந்தையாரின் ஸ்தானத்தைக் கடந்து தம்முடைய 'குருநாதர்' என்றே அவரைப் போற்றி நடந்தார்.

"இவ்வாறு தம்பிமுத்துப்பிள்ளை, ஆராய்ந்து பதிப்பித்தல், அச்சுக் கோத்தல், புத்தகம் வெளியிடுதல், பாடல்கள் இயற்றல், பத்திரிகை நடத்துதல் என்னும் இவற்றோடு பதிவுகாரியஸ்தர், பகுதிப் பராபத்தியக்காரன் என்னும் இரு அலுவல்களை மக்கள் மதிக்கவும், அரசினர் வியக்கத் தக்கவாறு செய்து வந்தார். கோவில் மூப்பராகவும், மக்கள் பணியே மகேசன் பணியென்று மதிப்பவராகவும் வாழ்ந்தார்" என்று 'நெஞ்சே நினை' என்ற நூலிலே தம்பிமுத்துப்பிள்ளையின் உயர்ந்த வாழ்வையும், உன்னதமான பணியையும் பசுமரத்தாணிபோல எம் நெஞ்சில் பதியவைக்கின்றார் நூலின் ஆசிரியர் 'அமுது' வித்துவான் ச. அடைக்கலமுத்து அவர்கள். எப்படி அன்புத் தந்தையையும் அருமையான சிறிய தந்தையையும் சுவாமி ஞானப்பிரகாசர் பெற்றாரோ அதுபோல இல்லறத்திற்கு இலக்கணம் வகுக்கப் பிறந்தவளாக தமது அன்புத் தாயைப் பெற்றார். தம்முடைய அருமைத் தாயைப் பற்றி தனயன் சுவாமி ஞானப்பிரகாசரே இப்படிச் சொல்கிறார்.

"தாயிடம் நான் பெற்றுக்கொண்ட சிறந்த போதனை வேதாகமங்களைப் பூச்சியமாய் வாசித்தலும், செகமீட்பராகிய எங்கள் ஆண்டவரில் மெய்யன்பு கொள்ளுதலுமே என்று சொல்லலாம். அவருக்குப் பழைய புதிய ஏற்பாடுகளின் சரித்திரங்கள் பழம்பாடமாகத் தெரியும்"

"பிள்ளைப் பாட்டுக்கள், மிருகங்களின் கதைகளோடு பழைய ஏற்பாட்டுச் சரித்திரங்களையும் இயேசுநாத சுவாமியின் சரித்திரத்தையும் எனக்குச் சொல்லிக் கொடுப்பார். ஆண்டவர் பிறப்பில் அன்பு மூட்டுகின்ற சிறு பாடல்களைச் சொல்லித் தருவார். இவைகளால்தான் சரித்திரப் பிரீதியும், வேதாகம வாசிப்பில் விருப்பமும், சங்கீதத்தில் சார்பும் எனக்குண்டாயின என்று எண்ணுகின்றேன். என் தாயைப்போல ஆண்மக்களை வயது சென்ற பின்னரும் அருகில் வைத்து அளவளாவிப் பேசுகிற தாய்மாரை நான் அதிகமாய்க் கண்டதில்லை".அன்போடு சேர்த்து அறிவையும், பாலோடு சேர்த்துப் பண்பையும் கொடுக்கின்ற தாய்மாருக்கு அன்னமுத்து ஓர் அருமையான எடுத்துக்காட்டு.

(தொடரும்)

**அருட்பணி. செ.அன்புராசா அ.ம.தி**

# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா ,அமதி

(அபி, யாழ்ப்பாணம்)

**கேள்வி: 25.03.2025அன்று யாழ்ப்பான மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தைப் பார்த்தீர்களா? நமது மக்கள் பிரதிநிதிகள் அபிவிருத்தி செய்வார்கள் என்று தென்படவில்லையே! பாடசாலை மாணவர்கள் வாய்த்தர்க்கம் செய்வதுபோல நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட்டார்கள். இவர்கள் பற்றி?**




**பதில்:** அபி, இவர்களால் அபிவிருத்தியும் இடம்பெறாது! இனவிருத்தியும் நடைபெறாது! ஒரு விருத்தியும் கைகூடாது! இவர்கள் தங்களின் குப்பைகூழங்களைக் கொட்டுகிற இடமாக இவ்விடங்களைப் பாவிப்பதுதான் வேதனையான விடயம். இப்பேர்ப்பட்டவர்களுக்கு வாக்களித்தவர்கள் தான் ஐயோ! பரிதாபத்திற்குரியவர்கள். இதிலிருந்தாவது யாரை மக்கள் பிரதிநிதிகளாக அனுப்பவேண்டும் என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்!

(ராஜன், மன்னார்)

**கேள்வி: புனித வாரத்திற்கு முன்பதாக திருப்பாடுகளின் காட்சி ஆற்றப்படுவது உண்டு. அந்த வகையில் குறிப்பாக மன்னார், யாழ்ப்பாணம் போன்ற மறைமாவட்டங்களிலும் புலம்பெயர் நிலத்தில் சில நாடுகளிலும் இவ்வாண்டும் இது ஆற்றுகை செய்யப்பட்டிருக்கிறது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் எனப் பலரும் மாலை அணிவிக்கப்பட்டு, ஆராத்தி எடுக்கப்பட்டு, பெரும் மேளதாளத்துடன் வரவேற்கப்படுவதும், அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றல், பேச்சுகள், நினைவுக் கேடயங்கள் எனப்பல விடயங்கள் நடந்தேறுவதையும் காணக்கூடியதாக இருந்தது! இவையெல்லாம், உண்மையில், புனித வாரத்தில் இருக்கவேண்டிய மனநிலையைக் குழப்புவதாக இருந்ததல்லவா!? திருப்பாடுகளின் காட்சி ஆற்றுகையின்போது மாலைகள், மரியாதைகள், ஆராத்தி, மேளதாளங்கள் போன்றவை தேவைதானா?**

**பதில்:** ராஜன், இன்று விழாக்களுக்கு பஞ்சமில்லைத்தானே! ஆகவே, மாலைகள், மரியாதைகள், மேள தாளங்கள் போன்றவற்றை வேறு விழாக்களில் வைத்துக் கொள்வது நல்லது. திருப்பாடுகளின் காட்சியை ஆற்றுகை செய்யும்போது அவ்வாற்றுகையின் 'பிரதம விருந்தினர்', 'சிறப்பு விருந்தினர்', 'கௌரவ விருந்தனர்' எல்லாம் இயேசு ஆண்டவர் ஒருவரே! எனவே, இவ்வாற்றுகையை ஒழுங்கு செய்பவர்கள் அவ்வாற்றுகை செய்யப்படும் காலநேரத்தைக் (புனித வாரத்தைக்) கருத்தில்கொண்டு இயேசு ஆண்டவரின் பாடுகள், மரணத்தை மையப்படுத்திய மீட்புச் செயலுக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இவ்விடயத்தில், திருமறைக் கலாமன்றம் பின்பற்றுகிற நடைமுறை மிக வும் எடுத்துக்காட்டானது, முன்னுதாரணமானது, எல்லாரும் பின்பற்றக்கூடியது, அனைவராலும் பின்பற்றப்பட வேண்டியதும் ஆகும். மேற்கூறப்பட்ட மாலைகள், மரியாதைகள், விருந்தினர் வரவேற்பு என எதுவுமின்றி 03 நிமிட அருளுரையோடு திருப்பாடுகளின் காட்சி ஆற்றுகை செய்யப்படுகிறது. இது, இவ்வாற்றுகையின் புனிதத் தன்மையைப் பேணுவதற்கும் இவ்வாற்றுகை செய்யப்படுவதற்கான நோக்கத்தை அடைவதற்கும் மிகமிக உதவியாக இருக்கும்!

(கவி, யாழ்ப்பாணம்)

**கேள்வி: முகநூலில் அருமையான கவிதைகளை எழுதி வருகிறீர்கள்? அடுத்த படைப்பு எதுவாக இருக்கும்?** **பதில்:** கவி கவிதை நூலாக இருக்கும்!

(அமலன், யாழ்ப்பாணம்)

**கேள்வி: திருத்தந்தை 14ம் லியோ தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். இவரின் தெரிவு பற்றி?**

**பதில்:** அமலன், தூய ஆவியானவர் இன்னும் உயிர்த்துடிப்போடும் ஆற்றலோடும் இருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகி---றது.

(அன்ரனி, யாழ்ப்பாணம்)

**கேள்வி: சாதி பார்ப்பவர்களுக்கு என்ன அறிவுரை கூறுவீர்கள்?**

**பதில்:** அன்ரனி, அண்மையில் படித்ததில் என் மனத்தைச் சுட்ட ஒரு சிந்தனை! "பள்ளியில், காதலில், திருமணத்தில், கோயிலில், ஏன் சுடுகாடு வரையிலும் சாதி வெல்கிறது. ஆனால், அதனால் வெல்ல முடியாத ஒரே ஒரு இடம் இரத்தம் மட்டும்தான்! ஆம், உயிருக்காகப் போராடும் ஒருவருக்கு இரத்தம் ஏற்றும்போது இந்த சாதி நபர்களுடைய இரத்தம்தான் வேண்டும் என்று எவரும் கேட்பதில்லை. சாதிக்கு இரத்தவெறி உண்டு. ஆனால், இரத்தத்திற்கு சாதிவெறி கிடையாது..!" அவசர தீவிர சிகிச்சைப் பிரிவில் கைகளை விரித்துக் கொடுக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் இவ்வுண்மையை முழுமையாகப் புரிந்து கொள்வார்கள்.


## நீங்காத நினைவுகளில் 1ம் ஆண்டு

மண்ணில்
17
08
1936



விண்ணில்
21
05
2024

**அமரர். கி. யேசுராஜன்**

ஓய்வுநிலை ஆசிரியர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயம்.
புனித வின்சன் டி போல் சபை மூத்த உறுப்பினர்.
புனித ஆசீர்வாதப்பர் பந்தி, நல்லூர்.

இவ் உலக வாழ்வை முடித்து மறு உலக வாழ்வு வாழச் சென்று
ஆண்டுகள் ஒன்று ஆனதுவோ!
எங்கள் உள்ளம் அதை ஏற்க மறுக்கிறதே.
உங்கள் நினைவுகள் எங்கள் இதயத்தை கனக்க வைக்கிறதே.
உலகில் எமக்கிருந்த மேலான சொத்து நீங்கள் அல்லவோ!
பல தியாகங்கள் செய்து எம்மை நீங்கள் உருவாக்கினீர்கள்
உங்கள் அன்பிற்கும் அரவணைப்பிற்கும் நிகர் ஏதும் இல்லை.
உங்கள் நினைவுகள் எங்கள் மனதை விட்டு என்றும் பிரியாது.
உம் பாதுகாவலராம் ஆசீர்வாதப்பரிடம் எமக்காய் மன்றாடும்.

60, சென்.பெனடிக்ற் றோட்
நல்லூர், யாழ்ப்பாணம்

AD -79

குடும்பத்தினர்



## விண்ணக வாழ்வின் ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
21
03
1935

விண்ணில்
04
06
2018



அமரர்

**இசைக்கலைஞன் வென்டக்கோன் பொன்ராசா**
**அன்ரன் கிளாறன்ஸ் ஆனந்தராஜா**

(ஓய்வு பெற்ற ஆசிரியர் ஹென்றியரசர் கல்லூரி-இளவாலை)

ஆண்டு ஏழு ஓடி மறைந்தாலும் எம் நெஞ்சில் நிலைத்திருக்கும் பாசதீபங்கள்
உங்கள் நினைவுகள் என்றும் அழியாது அன்புக்கு இருப்பிடமாய் வாழ்ந்தவர்
ஆசிரிய பணிக்கு அர்ப்பணித்திட்டவர் இல்லற வாழ்வில் இலக்கியமாய்
இருந்தவர் ஈகை செய்து இன்புற்றிருந்தவர் எளிமை வாழ்வதனை
எமக்குணர்த்தி ஏணிப்படியாய் நின்றெம்மை உயர்த்தியவர் ஐக்கியமாய்
வாழ்வதை வலியுறுத்தி ஒற்றுமை ஒப்புரவு குடும்பத்தில் வேண்டுமென்றார்
ஓயாமல் அதற்கு உழைத்த அன்பு அப்பாவே, உம் நினைவுகள் என்றும் எம்மை
விட்டு நீங்கா. P.A.C ஆனந்தராஜா அவர்கள் நாடகக்கலை எட்டாக்கனியாய்
இருந்த மாணவர்களுக்கு, அதன் மேல் விருப்பம் வளரச் செய்தவர்.
மாணவர்களின் நாடக்கலை மீதான ஆர்வம் விரும்பத்தகாததாயும், கல்விச்
செயற்பாடுகளுக்கான இடையூறாகவும் கருதப்பட்ட காலத்தில் நாடகத்தை
பாடசாலை களிலே பாடத்திட்டத்திற்குள் கொண்டு வந்தவர்களுள்
முன்னோடியாகத் திகழ்ந்தவர். உலகெங்கும் பரந்து தொடர்தும்
இயங்கிவரும் பல நாடகங்களை உருவாக்கி வளர்த்தவர். நாடகத்தைக்
கருவியாக்கி போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு உளவளத்துணை
வழங்கலை தன் இறுதி மூச்சுவரை செயற்படுத்தி வந்தவர். கல்வி நாடகம்
ஆற்றுப்படுத்தல், உளவள ஆலோசனை என தனது வாழ் நாளை தொண்டுக்
காகவே கொண்டு சுமந்த ஆசானுக்கு நன்றி சொல்லும் முகமாக இந்த அன்புப்
பதிவு வெளியிடப்படுகின்றது.

"மனோ சாந்தி"
பிரிவுத் துயருறும்
குடும்பத்தினர்

407 கொறவப் பொத்தானைவீதி,
இறம்பைக்குளம், வவுனியா 024 2221974

AD-29



**FOR SALE**
St.Joseph's Catholic Press



12 x 18 = 1250/-



A4 = 900/-

# பிரமாண்டமான செபமாலைப் பூங்கா பண்டத்தரிப்பு பற்றிமா ஆலயப் பகுதியில் யாழ் ஆயரினால் திறந்து வைப்பு






பண்டத்தரிப்பு புனித பற்றிமா அன்னை யாத்திரைத்தல பகுதியில் பிரமாண்டமாக அமைக்கப்பட்ட செபமாலைப் பூங்காவினை யாழ் ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை புனித பற்றிமா அன்னை திருவிழா அன்று திறந்து வைத்தார். நான்கு மறையுண்மைகளையும் சித்தரிக்கும் அழகான சுரூபங்கள் அமைக்கப்பட்டு இறை மக்கள் அமைதியாகத் தியானித்து செபிக்கக்கூடிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. அருட்பணி ஜோ.சனிஸ்ரன் அடிகளாரின் எண்ணத்தில் யாழ் ஆயரின் அனுமதியுடன் இச் செபமாலைப் பூங்கா அழகுற மலர்ந்துள்ளது. இப் பூங்காவின் நிர்மாணப் பணிகளுக்கான பெரும்பகுதி பண உதவியைக் கனடா கமில்டன் மறைமாவட்டம் உதவியமையும் புலம் பெயர் வாழ் பண்டத்தரிப்பு இறை மக்களின் பெரும் பங்களிப்புடனும் இச் செபமாலைப் பூங்கா அமையப் பெற்றுள்ளது. மரியன்னை வழியாக இறைவேண்டல் புரிய இவ் அழகான செபமாலைப் பூங்கா யாழ் மறைமாவட்ட இறைமக்களுக்குப் பெரும் பாக்கியமாகவே அமைந்துள்ளது.

## கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி நிறுவுனர் தினம்



யாழ்ப்பாணம் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் நிறுவுனர் ஆயர் அமரர் பேரருட்தந்தை தியோகுப்பிள்ளை அவர்களின் நினைவுநாள் நிகழ்வு கடந்த 28ஆம் திகதி அங்கு நடைபெற்றது. கல்லூரி அதிபர் அருட்தந்தை தயாபரன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருப்பலியும் மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றன. திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வரும் புனித சவேரியார் இறையியல் நிறுவக இயக்குநருமான அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுக்க இயேசு சபை அருட்தந்தை ஜெயராஜ் இராசையா அவர்கள் மறையுரை யாற்றினார். இத்திருப்பலியில் குருமட மாணவர்கள் மற்றம் விரிவுரையாளர்கள் கலந்துகொண்டனர். புனித சவேரியார் குருமடம் மறைந்த ஆயர் பேரருட்தந்தை தியோகுப்பிள்ளை அவர்களால் 1980ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுடன் ஆயர் அவர்களின் விண்ணகவாழ்வின் நினைவுநாள் கல்லூரியின் நிறுவுனர் தினமாக கொண்டாடப்படுகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## திருநெல்வேலி புனித சவேரியார் ஆலய பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல்



திருநெல்வேலி புனித சவேரியார் ஆலய பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை பத்திநாதர் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 07ஆம் திகதி நடைபெற்றது.
யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் 45 மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர்.

## தர்மபுரம் பங்கு பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல்



தர்மபுரம் பங்கில் பிள்ளைகளுக்கான உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை றெனால்ட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 06ஆம் திகதி நடைபெற்றது.
யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் விசுவமடு புனித இராயப்பர் ஆலயத்தில் நடைபெற்ற திருப்பலியில் 46 மாணவர்கள் உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர்.

## பிரமந்தனாறு இறை இரக்க ஆண்டவர் திருத்தல வருடாந்தத் திருவிழா



தர்மபுரம் பங்கின் பிரமந்தனாறு இறை இரக்க ஆண்டவர் திருத்தல வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை றெனால்ட் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆர ம்பமாகி 26ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணைவிழா இடம்பெற்றது.

திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். இறை இரக்கப் பக்தியை முன்னெடுத்து இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது கொட்டில் ஆலயமான பிரமந்தனாறு இறை இரக்க ஆண்டவர் ஆலயம் வன்னியில் நடைபெற்ற இனப்படுகொலைப் போரின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் தஞ்சமடைந்து இறைவனின் இரக்கத்தை அனுபவித்த ஓர் வரலாற்று சிறப்புமிக்க ஆலயமாக அமைந்திருப்பதுடன் இவ்வாலயத் திருநாளில் யாழ். மறைமாவட்டத்தின் பல இடங்களிலிருந்தும் ஆயிரக்க ணக்கான மக்கள் வருகை தந்து வழிபாடுகளில் பக்தியுடன் பங்குகொள்வதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இளவாலை புனித யூதா ததேயு ஆலயத் திருவிழா



இளவாலை புனித யூதா ததேயு ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை எரிக் றொசான் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 03ஆம் திகதி நடைபெற்றது. சித்திரை மாதம் 24ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 02ஆம் திகதி வெள்ளிக்கிழமை நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஜெயக்குமார் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபர் மைக் மயூரன் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக் கொடுத்தனர்.

## குருக்களுக்கான திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு




யாழ். மறைமாவட்டத்தில் புதிய குருக்களுக்கான திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு கடந்த03ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற திருநிலைப்படுத்தல் திருச்சடங்கு திருப்பலி யாழ். மறைமாவட்டத்தைச் சேர்ந்த திருத்தொண்டர்களான பொன்ராசா டினுஸன், அலெக்சாண்டர் றொகான் டியோனி, கிறிஸ்ரி ஞானராஜா றொகான், லூயிஸ் அன்ரனி பஸ்ரியன் மற்றும் திருவுள பணியாளர் சபையை சேர்ந்த திருத்தொண்டர் சஞ்சுதன் ஆகியோரே புதிய குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர். புதிய குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர்கள் அர்ப்பணிப்புடன் பணிவாழ்வில் நிலைத்திருந்து இறைபணியாற்ற இறையாசீர் வேண்டுவோம்.

## பலாலி புனித டொன் பொஸ்கோ இளையோர் ஒன்றிய விளையாட்டு நிகழ்வுகள்



உயிர்த்த ஞாயிறு தினத்தை சிறப்பித்து பலாலி பங்கின் புனித டொன் பொஸ்கோ இளையோர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட விளையாட்டு நிகழ் வுகள் கடந்த 27ஆம் திகதி நடைபெற்றன. பங்குத்தந்தை அருட்தந்தை சுதர்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் அன்றைய தினம் காலை மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், நீச்சல் மற்றும் படகோட்ட போட்டிகளும் மாலை பலாலி விண்மீன் விளை யாட்டுகழக மைதானத்தில் மைதான விளை யாட்டுக்களும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட் தந்தை ஜோன் குருஸ் அவர்கள் பிரதம விருந்தினராகவும் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவ கல்லூரி நிதி முகாமையாளர் அருட்தந்தை டினேசன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2025ம் ஆண்டு வைகாசி மாதம்18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.